பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 | |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 | |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 | |

[வாரப்பதிப்பு]

[illegible] பாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
[illegible] விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஸ்ரீ மார்கழி 11-உ (26—12—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 35.

## உண்மையான கதர்

கெட்டியான கதர்!...

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால் அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் ஸ்டாக்வசம் இருப்பிலிருக்கின்றன. விலை ஜாபதாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, எப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ, 1—8—0.

# கீழ்காய்நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0

ஷெ டின் 3-க்கு ரூ. 3—4[illegible]

வி. பி. தபாற் செ[illegible] வேறு

எம். சி. நடேச [illegible],

சுதேச ஔ[illegible]சாலை,

கு. மேல வீதி, [illegible]ணம்.

## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் வி[illegible]நகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகட[illegible]தவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய [illegible]நேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞான[illegible]தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0


1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனம்.

[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன். ஆபீஸ்.

சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதராஸ்.

இனம்! இனம்!!

டேபில் டயம்பீஸ் இனம்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனம் டைம்பீஸுடன் ஷெரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,

15-A பீட்; அண்ணு பிள்ளைத் தெரு,

மதராஸ்.

# மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டினின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,

சென்னை.

# கண் தைலம்.

சிறந்த அனுபவ நேத்ர ரோக நிவாரணி.

இம்மேன்மையான தைல ஸ்நானத்தால் கண் நோய், கண் குத்தல், கூசல், நீர் வடிதல், கண் மங்கல், மேகநீரால் குருடாதல், அந்திமாலை, பீ வகட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல். பூவிழுவிடு கண் சிவப்பு, கண் இமை புருவங்களில் அணு கண் புகைச்சல், தலை நோய்களும் குணமாகிவிடல், கண் குளிரும், ஒரு டின் ரூ. 3. வி. பி. தனிம்ஃ

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

# நாம்மதித்த நவகுண மிளகு.

1. பித்த மயக்கங்கள் காணாதோடும். 2. ஈரக்குலைவலி, மார்வலி, நீங்கிவிடும். 3. அமட்டல், வாந்தி, விக்கல் க்ஷணத்தில் நிற்கும். 4. உஷ்ணத்தால் ஏற்பட்ட போக்கு, அஜீரணம் தீர்ந்துவிடும். 5. வைசூரி, ஜுரம், ஜன்னி, பிரஸவ அறை, இக்காலங்களில் ஏற்படும தாகம், வறட்சி உடனே நிற்கும். 6. ரயில், கப்பல், வண்டி முதலிய பயணத்தில் ஏற்படும் 1, 3 லக்ஷத்திலுள்ள துர்க்குணங்களுக்கு சஞ்சீவியாக பயன்படும. 7. சுருட்டு, சிகரெட் முதலியன அதிகம் உபயோகப்படுத்துவதால் நேரும கெடுதல்களை போக்கடிக்கும். 8 லாகிரிவஸ்துக்களால் ஏற்படும் மயக்கங்களை உடனே தணிக்கும். 9. பிரசங்கிகள், வக்கீல்கள், மாணவர்கள் இவர்களுக்கு ஏற்படும் நாவறட்சியை நீக்கவும், சாதாரண தாகத்தை தணிக்கவும், பின்னும் மூளைக்கு அதிக வேலை தந்து, அவசிய போக்கி ஆண்மை சக்தி குறைந்து அதனால் உண்டாகும் தீமைகளுக்கு பரிகாரியாகும்.

குறிப்பு:—இது சாதாரண முழு மிளகை அப்படியே சொருபம் மாறாமல் பகுவம் செய்தது. ஒருநாளில் எத்தனை தடவையேனும், தடவைக்கு எத்தனை மிளகேனும் வியாதி இருப்பினும், இல்லையெனும் பயமின்றி உபயோகிக்கலாம்:

அரை அவுன்ஸ் பாட்டல் 1க்கு 0—8—0

" " டஜன் 5—0—0

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும் வி. பி-ல் 3 பாட்டல்களுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

ஹக்கீம் ம. அ ஷம்ஷுத்தீன் சாஹிப்,

யூனானி தமிழ் சித்தவைத்தியம்,

மாயவரம், (தஞ்சாவூர் ஜில்லா S.I.R.)

# எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணுபிள்ளைத் தெரு, மதராஸ்.



## பெட்ரோமாக்ஸ் லைட்.


லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைசயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

# சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம்



குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்கவிலாஸம் பிரஸ்,

அருணாசல முதலி வீதி, மதராஸ்

# நம்பிக்கையான வியாபாரஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷராட் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி கம்பெனி.

தபால் பெட்டி 292.

6-99 பவழக்காரத்தெரு,

சென்னை.

## "தமிழ்நாடு கான்பரன்ஸின்" யோக்கியதை.

நமது பார்ப்பனர்கள் தமிழ்நாடு கான்பரன்ஸ் என்பதாக பெயர்வைத்து தமிழ்நாட்டுப் பொதுமக்களின் பேரால் ஒரு மகாநாடு என்று ஒரு சிறு கூட்டம் கூட்டி அதன்மூலம் தங்களது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொள்ள எவ்வளவோ தந்திரங்களும் சூழ்ச்சிகளும் செய்தும் கடைசியாக மகாநாட்டின் உண்மை வேஷம் வெளியாகி விட்டது. மகாநாட்டுக்கு உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் கோவிந்தராஜுலு முதலியார் அவர்கள் அவசரத்தில் பிடித்து வைத்த பிள்ளையாரைப்போல் கொண்டு வந்து வைக்கப்பட்டவராவார் அவர் கிளிப்பிள்ளையைப்போல் சொல்லிக்கொடுத்ததைச்சொல்லும் நல்ல சுபாவமுள்ளவர் என்பதும் பெசன்டம்மையார் காலம் முதல் கொண்டும் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாய் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மாகாணச் சங்கமென்னும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ மருவிய காங்கிரஸ் கொள்கையுடைய பார்ப்பனரல்லாதார் சங்கம் ஏற்பட்டது முதல் கொண்டும் பார்ப்பனருக்கு நல்லபிள்ளையாய் நடந்து பார்ப்பனர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் அன்னவரைப் பிடித்து உபசரணை அக்கிராசனர் வேஷம்போட்டு பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை நன்றாய் வையும்படி ஏவினர். ஸ்ரீமான் முதலியாரும் தன்னை நம்பி அக்கிராசனராக்கியவர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்யாமல் ஆசைதீர ஒரு மூச்சு பார்ப்பனரல்லார் புத்திசாலித்தனத்தை இகழ்ந்தும், பார்ப்பனரின் புத்திசாலித் தனத்தைப் புகழ்ந்துபேசி பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும் குறை கூறி தனது நடனத்தை முடித்துக்கொண்டார். மகாநாட்டுத்தலைவரோ சொல்லவேண்டியதில்லை. பெரிய வருணாச்சிரம தர்மப் பார்ப்பனர். நமது நாட்டுப் பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளில் சிலதுக்கு கொள்கையும் இல்லை சில சமயங்களில் மானமும் இல்லை என்று சொல்லிவிடலாம் எப்படியாவது பொழுதுவிழுந்து, பொழுது புலர்ந்தால்போதும் மற்றபடி உண்மையைப்பற்றி கவலையில்லை. ஒரு சமயத்தில் பார்ப்பனர்கள் அயோக்கியர்கள் என்பார்கள் ஆனால் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் இவர்கள் மூவர்மாத்திரம் யோக்கியர்கள் என்பார்கள். மற்றொரு சமயம் ராஜகோபாலாச்சாரியார்மாத்திரம் யோக்கியர் என்பார்கள். மற்றொரு சமயம் சதாசிவய்யர் மாத்திரம் யோக்கியர் என்பார்கள். மற்றொரு சமயம் அரசியல் பார்ப்பனர்மாத்திரம் அயோக்கியர்கள் ஸ்ரீமான் K. V ரங்கசாமி அய்யங்கார் யோக்கியர் என்பார்கள். ஸ்ரீமான் K. V. ரங்கசாமி அய்யங்கார் எந்தப் பார்ப்பனர். பஞ்சாங்க பார்ப்பனரா? அல்லது வருணாச்சிரம பார்ப்பனரா? அல்லது அரசியல் பார்ப்பனரா? என்பதை சொல்லமாட்டார்கள். இந்த நிலைமையில் ஸ்ரீமான் K.V. ரங்கசாமி அய்யங்காருக்கு யோக்கியர் பட்டம் எப்படிக் கட்டினார்கள்? எதற்காக அவரை "அரசியல் பார்ப்பனர்கள் எல்லாம் அயோக்கியர்" என்று ஒப்புக்கொள்ளப்பட்டவராலேயே "முதல்முதல்" தெரிந்தெடுக்கப்பட்டாரோ தெரியவில்லை. அந்த மகானுக்குதெய்வானுகூலத்தால் ஒரு சவுகரியம் உண்டு அதாவது "அங்கு என்ன நடந்தது எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே" என்று சொல்லி தப்பித்துக்கொள்ளக்கூடும்" இதைத்தவிரவேறு எந்த வழியில் தமிழ் மாகாண மகாநாட்டுக்கு தலைவர் யோக்கியதை பெற்றவர் என்பதும் தெரியவில்லை. தேசத்திற்காக, நாட்டிற்காக, சமத்துவத்திற்காக, ஒத்துழையாமைக்காக, முட்டுக் கட்டைக்காக என்ன செய்தார். ராஜாங்க சபைக்குப்போனார், சட்டசபைக்குப் போனார் என்பதைத் தவிர செய்ததென்ன. ஒன்றும் செய்ய வேண்டாம் என்றாலும் யோக்கியமாகவாவது நடந்துகொண்டாரா என்று பார்த்தால் அயோக்கியத் தனமாக ஒரு உதாரணக் கதை சொல்லியிருக்கிறார். ஒரு பார்ப்பனரல்லாதாருக்காவது இக்கதையின் இழிவு தெரியவில்லை. அதோடுமாத்திரமல்ல அவரைப்புகழ்ந்துமிருக்கிறார்கள். ஐயோ நமது மானங்கெட்டத்தன்மையை என்னவென்று சொல்வது. அவர் உதாரணமாகச் சொன்ன கதை என்னவென்றால், "கூண்டில் அடைப்பட்டுக்கிடந்த புலியை ஒரு பிராமணர் விடுவித்துவிட்டாராம் அந்தப்புலி வெளிவந்து அவனையே தின்னப்பிரயத்தனப்பட்டதாம். இந்த விசுவாச துரோகத்தை வேறு யாவரும் கேட்கவில்லையாம் கடைசியாக ஒரு நரி இடம போய் பிராமணர் அழுதாராம். நரி வந்து பஞ்சாயத்து செய்யும்போது புலி எப்படியிருந்தது பிராமணன் எப்படி திறந்துவிட்டான் என்பதை நேரில் பார்க்க ஆசைப்பட்டதால் பழையபடி புலி உள்ளேபோய் தான் இருந்த மாதிரியை காட்டிற்றாம் பிராமணரா கதவை இறுகப் பூட்டிவிட்டு தன் வேலைக்குப் போகும்படி நரி சொல்லிக் கொடுத்ததாம்." அதுபோல் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாராகிய புலிகள் கூண்டுக்குள் அடைப்பட்டிருந்ததை வெளியாக்கினதாகவும் விசுவாசங்கெட்ட பார்ப்பனரல்லாதார், வெளியாக்கிய பார்ப்பனர்களை வைததாகவும் குசனை கட்டியிருக்கிறார். இதில் நரிகள் யாரோ தெரியவில்லை. ஸ்ரீமான்கள் குழந்தை, குப்புசாமி முதலியார், ஷாபிமகமது சாயபு, அமீத்கான் சாயபு, பாவலர், கோவிந்தராஜுலு முதலியார், சாமி வெங்கிடாசலம் செட்டியார் ஆகியவர்களோ அல்லது ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தரம் முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு, R. K. ஷண்முகம் செட்டியார், வெங்கிடபதிராஜு, முத்தைய முதலியார் போன்றவர்களோ அல்லது பணம் கொடுத்த மடாதிபதிகள் மகந்துக்கள் முதலியவர்களோ அல்லது ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சாஸ்திரி, ரங்கசாமி அய்யங்காரோ அல்லது எஸ். சீனிவாசய்யங்காரோ அல்லது வெள்ளைக்காரர்கள் தானோ இன்னாரைத்தான் ஸ்ரீமான் K. V. ரங்கசாமி அய்யங்கார் மனதில் குறித்துச் சொன்னார் என்பது விளங்கவில்லை. அது எப்படியானாலும் பார்ப்பனரல்லாதாருக்கு இக்கதை எவ்வளவு இழிவைக் கொடுக்கிறது என்பதை மாத்திரம் குறிப்பிடுகிறோம். தவிர ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப்பற்றி புகழ்ந்திருப்பதை நோக்கும்போது ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் யோக்கியதை மண்டுகளுக்கும் விளங்காமல் போகாது. அவர் புகழ்வதாவது:—

"தீர்க்க தரிசனமுடைய தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மக்களின் அறியாமையை போக்கி, ஜாதி பேதத்தை ஒழிக்க அவரது முயற்சியே பயனளித்தது. ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய எல்லா குணமும் அவரிடம் இருக்கின்றன. அவரது அறிவின் திறமையும், தியாக உணர்ச்சியும், தேசாபிமானமும், பெருந்தன்மையும் பாராட்டத்தக்கது. அவரில்லாதிருந்தால் நமது கட்சி என்னவாயிருக்கும்" என்று பேசியிருக்கிறார். இதிலிருந்து ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காரின் மன உணர்ச்சி இப்படிப்பட்டதென யாரும் சுலபத்தில் அறியலாம். இவரை சில பார்ப்பனரல்லாத பத்திரிகைகள் வானமளாவப் புகழ்ந்ததின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை. அக்கிராசனர், தலைவர் ஆகியவர்களின் குணங்கள் இப்படி என்றால் நடந்த தீர்மானங்களின் கதி என்னவென்று பார்ப்போம். ஒன்பது தீர்மானங்கள் அதாவது:—

1. இறந்துபோனவர்களுக்கு அனுதாபம் (இது வழக்கப்பிரகாரம்.)

2. சர்க்கா சங்கத்தார் வேலையைப் பாராட்டியும் காங்கிரஸ்காரர் கதர்கட்ட கோரியும் ஒரு தீர்மானம். (இதற்காக தங்களுக்குள் ஒரு திட்டமும் இல்லை; பிரசாரமும் இல்லை. பேருக்கு மாத்திரம் தீர்மானம் போட்டதாக பொதுஜனங்களை ஏமாற்றச் செய்த தந்திரமே ஒழிய இதில் காரியம் ஏதாவது இருக்கிறதா?)

3. தீண்டாமையை ஒழிக்க காங்கிரசுக்கு சிபார்சு செய்வதாக ஒரு தீர்மானம். (தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு இதில் ஒருவேலையும் இல்லை; ஒரு பிரசாரமும்இல்லை காங்கிரசிலும் தீண்டாமை ஒழியவேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் ஏற்படலாம். இதில் தீண்டாமை ஒழிய வழியுண்டா? ஏதாவது திட்டமோ பிரசாரமோ செய்ய இடமிருக்கிறதா? ஆதலால் இதுவும் பாமர ஜனங்களை ஏய்க்கச்செய்த சூழ்ச்சி.)

4. அந்தமான் தீவிலுள்ள மாப்பிள்ளைமார்களைப்பற்றி ஒரு தீர்மானம். (இது பழையகாலத்து காங்கிரஸ்படி ஒரு விண்ணப்பம. தவிரவும் மகமதியர்களை ஏமாற்றுவதற்கென்று ஏற்படுத்தின எழுத்து தீர்மானம் இதற்கும் காங்கிரஸ் கமிட்டிக்கு திட்டமோ வழியோ கிடையாது.)

5. ஸ்தல ஸ்தாபனங்களை காங்கிரஸ் கைப்பற்றவேண்டும். (இதற்கு மாத்திரம் காங்கிரஸ் பிரசாரம், காங்கிரஸ் பணம் செலவு எல்லாம் உண்டு. எப்படி என்றால் காங்கிரஸ் கைப்பற்றவேண்டுவதற்கு செலவும் பிரசாரமும் செய்யலாம். இது பார்ப்பனரல்லாதார் பெருவாரியாய் ஸ்தல ஸ்தாபனத்தில் இருப்பதை ஒழித்து பார்ப்பனர் கைப்பற்றச்செய்யும் சூழ்ச்சி அடுத்த வருஷம் பூராவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்த வேலையில்தான் இருக்கப்போகிறது என்பது உறுதி.)

6, இந்தியா பூரண சுதந்தரமடைவதே

யானது வகுப்பு இயக்கந்தான்: ஆகையால் அந்த மந்திரிகளை மாற்ற அவர்கள் பலவகைகளிலும் பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள்.

அப்படிச் செய்தும் புதிய மந்திரி கூட்டத்தார் கூட பழைய மந்திரி கூட்டத்தாரைப்போலவே வகுப்பு இயக்கத்தைக் கொண்டவர்களாயிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. அன்பர்களே! நாம் பிராமணர்களுக்கு விரோதிகளில்லை. ஆனால் பிராமணர்கள் மட்டும் ஆதிக்கம் அடைவதை ஒத்துக்கொள்ள முடியாது. நாட்டின் முன்னேற்ற வழிகளுக்குப் பல இடையூறுகள் முன்னமே இருக்கின்றன. நம் நாடு ஈடேறுவதற்கு எல்லா வகுப்பாருடைய ஒற்றுமையோடு பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் ஒத்துழைப்பும் சேரவேண்டியது அவசியமே. இவ்விரண்டு வகுப்பாரும் இயற்கையாகவும் உடனேயும் ஒன்று சேரவேண்டும். நம்முடைய பிராமண சகோதரர்கள் தங்கள் பிறப்புரிமையினால் மட்டும் மேன்மையுண்டாகிறதென்ற தப்பெண்ணத்தை யொழித்தாலொழிய நமக்குள் ஒற்றுமை ஏற்பட வழியில்லை.

சீமாட்டிகளே! கனவான்களே! கடந்த தேர்தலில், நமது இயக்கம் பெரிய வெற்றிபெறவிட்டாலும் நமது கொள்கைத் திட்டமானது சற்றும் அசையாமலும் அழியாமலுமிருக்கிறது. இந்தக் குறைவு நமது இயக்கத்தால் நமது நாட்டில் போதுமான கட்டுப்பாடான வழியில் கிளர்ச்சி செய்யாததாலும் வாக்காளர்களை முற்றும் கவனியாது விட்டதாலும் உண்டானது.

ஆகையால் இந்த மகாநாட்டின் முதல்வேலை நம்நாடு முழுவதும் நமது இயக்கத்தைத் திருத்தி அமைத்துக் கிளைச் சங்கங்களையும் நிலைநாட்டி பத்திரிகைகளினாலும் பிரசங்கங்களினாலும் வாக்காளர்களுக்கு உண்மையை அறிவுறுத்த வேண்டியதேயாகும். அடுத்த தேர்தல் காலத்திலாவது மற்ற எல்லா இயக்கத்தாரும் நம்மை ஒன்று சேர்ந்து எதிர்த்தபோதிலுங்கூட அவர்களைவிட அதிகத் தொகையினராக நம்மவர்கள் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெறுமாறு நம்மை அமைத்துப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சுய ஆளுகைக்கு மாற்றிய (Transferred departments) இலாக்காக்களில் நம்முடைய நோக்கங்களைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதுடன் சுய ஆளுகைக்கு மாற்றப்படாத இலாக்காக்களுடனும் போராடலாம்.

கனவான்களே! சென்ற பத்து ஆண்டுகளாக நாம் அரசியல் முறையிலேயே அதிக காலத்தைக் கழித்ததால், அதனினும் அதிக முக்கியமான மற்ற முயற்சிகள் கவனிக்கப்படவில்லை. இனி நம் வேலை சமூக வாழ்க்கையிலும் சிக்கனத் துறையிலுமிருக்கிறது. தீண்டாமை, மதுவிலக்கு சிறிய தொழில் வளர்ச்சிகள் முதலிய திட்டங்கள் நமது முழு கவனத்தையும் கவரவேண்டும்.

## தீண்டாமை.

நமது இந்து சமூகத்திலுள்ள எல்லாத் தீங்குகளிலும் மிகக்கொடியது தீண்டாமையேயாகும். அதை நீக்கினாலொழிய, நம்சமூகத்தில் பற்பல வகுப்பாருக்குள்ளும் சகோதர உணர்ச்சி உண்டாவதற்கு யாதொரு வழியுமில்லை. ஆகையால் நாமிந்த வழியில் பெருமுயற்சி செய்ய வேண்டும். பற்பல வகுப்புப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிலும் விளையாட்டுக் கட்டங்களிலும் ஒன்றாய்ச் சேர்த்துச் சிறுவயதிலேயே சகோதர உணர்ச்சியை உண்டுபண்ணுவது, தீண்டாமையையொழிக்கும் வழிகளில் ஒன்றாகும். தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுவோருடைய மக்களை ஏற்றுக்கொள்ளாத பள்ளிக்கூடங்களுக்கும் கலாசாலைகளுக்கும் அரசாங்கத்தார் உதவிப் பணம் கொடுத்து அங்கீகாரம் செய்யாமல் மற்றும் இவ்வழியில் உதவிசெய்யவேண்டும்.

சத்திரங்களையும் கோயில்களையும் மற்றப் பொது நிலையங்களையும் நடத்துகிற அதிகாரிகள் வகுப்புப் பிரிவினையைக்கருதி எவரையும் சேர்க்க மறுக்கக்கூடாது.

## மது விலக்கு.

உலகமுழுதும் தொழிலாளர்கள் பெரும்பான்மையும்கள் முதலிய மயக்கக் குடிவகைகளை உட்கொள்ளும் கெட்ட பழக்கத்தில் ஈடுபட்டவர்களாயிருக்கிறார்கள் என்பது உலகமறிந்தஉண்மை. நம்நாட்டிலும் அது இருக்கிறது. தொழிலாளர்கள் வருவாயிற் பெரும் பகுதியை இவ்வகையில் விரயமாக்கிச் சுகத்தையுங் கெடுத்துத் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் நல்வாழ்க்கையடையாமற் போகிறார்கள். தேச சமூகத்தின் ஒழுக்கத்தையும், சுகத்தையும், பொருளையும் அழித்துக் கொண்டிருக்கிற இக்கேடுகளை யொழிக்கும் வகை வழிகளைக் கண்டுபிடிப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

நமது நாட்டுக் காளையர்கள் நாடெங்கும் சென்று குடியின் கேட்டைப்பற்றி மக்களுக்கு எடுத்துச்சொல்லிப் பொதுநலத் தொண்டுபுரியும் சமயம் இதுவேயாகும். இந்தக்கேடு ஒழியும் பொருட்டு அரசாங்கத்தார் மதுவிலக்கால் தங்களுக்கு ஏற்படும் வருவாய்க் குறைவைப் பொருட்படுத்தாது நம்முடன் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

## சிறு கைத்தொழில்கள்.

இந்தியா பெரும்பான்மையும் வேளாண்மை நாடாகவிருக்கிறது. பயிர் விளைவானது பெரிதும் காலமழையைப் பொறுத்திருக்கிறது. பயிர்த்தொழிலாளர்களுக்குப் போதுமான ஒழிவு நேரமிருக்கிறது. பருவமழையில்லாதபோதும் அவர்களுக்கு யாதொரு வேலையுமில்லை. இவர்கள் கொட்டை நூற்றல் போன்ற சிறிய கைத்தொழில்களையாவது கைக்கொண்டால் சிறு ஊதியமாவது கிடைக்கும். சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கொட்டை நூற்றலை கட்டாயப்பாடமாக வைக்க வேண்டும். சிறு கைத்தொழிலாற் செய்யக்கூடிய கதர்போன்ற மற்ற எல்லாச் சாமான்களையும் வாங்கி ஆதரிக்கவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

## நீர்ப்பாசனம்.

நம்நாடு பயிர்த்தொழில் நாடாகையால் நமது செழிப்பு பரந்த நீர்ப்பாசன முறையைப் பொறுத்திருக்கிறது. இன்னும் அதிகமான நீர்ப்பாசனத்திட்டங்களைத் தொடங்கியும் வீணாக போகும் தண்ணீரைத் தேக்கும் பொருட்டு ஏரிகளைக் கட்டிக்கொடுத்தும் உதவி புரியுமாறு அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ளுகிறோம். துங்கபத்திரை, கிருஷ்ணா நீர்ப்பாசனங்கள் இலட்சக்கணக்கான ஏக்கர்களுக்குப்பாயும். கள்ளர் நாட்டு நிலங்களை நஞ்சையாக்க மேற்கு மலைத்தொடர்ச்சியிலுள்ள கல்லாறு, பம்பையாறுகளின், தண்ணீரைத் தேக்கித் திருப்புவது போன்ற சிறிய திட்டங்களுமிருக்கின்றன. இவ்வாறு செய்தால் அந்தக் குடிகள் செழிப்பதுமன்றியில் இந்த ஜில்லாவில் கிரிமினல் ஜாதியார் சட்டத்தை நடத்துவதும் அவசியமாயிருக்காது.

## கோயில் புகுதல்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பரவியிருக்கிற மற்றொரு பெருந்தீங்கு ஒன்றுண்டு. அதாவது நாடார் சகோதரர்கள் கோயிலுக்குள் விடப்படாததால் வருந்துகிறதேயாகும். அவர்கள் கோயிலுக்குள் புகுவதற்கு உதவியாகப் பொது மக்களுக்கு நல்லெண்ணம் உண்டாகும் படிக் கிளர்ச்சி செய்து இந்த நெடுங்காலக்குறைவை நீக்க நாம் வெகுபாடுபடவேண்டும்.

சீமாட்டிகளே! கனவான்களே! நாம் யாவரும் மதிப்பு வாய்ந்த அவைத்தலைவர் சொற்பொழிவைக் கேட்க ஆவலோடிருப்பதால் உங்களை இன்னும் காத்திருக்கச் செய்யமாட்டேன். நான் இதை முடிப்பதற்குமுன், நமது எதிரிகள் நமது இயக்கத்தின் குரல்வளையை நெரிக்கத் தங்களால் கூடிய வழிகளெல்லாம் முயன்றுகொண்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலைமையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

ஆகையால் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒரே மனதாய் ஒற்றுமைப்படவேண்டும். நம்மைக்கெடுக்க நம் எதிரிகள் செய்யும் முயற்சிகளை அழிக்கவேண்டும். நமது பார்ப்பன சகோதரர்கள் தங்களுக்குள் அரசியல் முறையில் எவ்வளவு மாறுபாடுகளிருந்தபோதிலும் அவற்றைக் கவனியாது தங்கள் வகுப்பின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு ஒற்றுமையுடன் வேலை செய்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோமல்லவா? அரசியல் முறையின் கொள்கைத் திட்டத்திலுள்ள மாறுபாடுகளை பொருட்படுத்தாது நம்முடைய வகுப்பார் முன்னேற்றம் அடையச்செய்ய, நாம் யாவரும் வித்தியாசமின்றி ஒற்றுமைப்பட்டு உழைக்க வேண்டியது ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாருடைய முக்கிய கடமையாகும். ஏனென்றால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் அரசியல் வளர்ச்சிக்கு மாத்திரமல்லாமல் சமூக வாழ்க்கை, கல்வி சிக்கன முறை முதலியவைகளுக்காகவும் பாடுபடுகிறது.

வரவேற்புக் கழகத்தின் சார்பாக, பல்வேறு அரசியல் கொள்கைத் திட்டங்களையுடையவர்களாயிருந்தாலும், பார்ப்பனரல்லாதார் அனைவரையும் இம்மகாநாட்டிற்கு நான் அழைத்திருக்கிறேன். அவர்கள் ஆழ்ந்த கருத்துக்கொண்டு நமக்கும் நம் இயக்கத்திற்கும் உதவி புரிவார்களாக.

நாங்கள் அவசரமாக அழைத்ததற்கு இணங்கித் தங்கள் சௌகரியங்கள் அனைத்தையும் பொருட்படுத்தாது இங்கு எழுந்தருளியிருக்கின்ற சீமாட்டிகளுக்கும் கனவான்களுக்கும் இந்த வரவேற்புக் கழகத்தின் சார்பாக வந்தனோபசாரங் கூறுவதுடன் நாங்கள் தங்களுக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளில் குறைபாடுகள் இருந்தால், பொறுத்தருளும்படி மறுமுறையும் வேண்டுகின்றேன்.

---

## வடஆற்காடு ஜில்லா 8வது கூட்டுறவு மகாநாடு.

---

வடஆற்காடு ஜில்லா கூட்டுறவு எட்டாவது பெருங்கழகம் நாளது 1927-௵ ஜனவரி ௴ 2௳ காலை 9மணிக்குத் துவக்கி இரண்டு நாட்களுக்கு அரக்கோணத்தில் நடைபெறும். அதையொட்டி விவசாய கைத்தொழில் கண்காட்சிகளும் நடைபெறும். பெருமை பெற்ற நமது வளர்ச்சித்துறை அமைச்சர் திருவாளர் ஆ. ரங்கநாத முதலியார் அவர்கள், பெருங்கழகத்தை திறந்து வைக்கவும் கோலைமாநகர் திருவாளர் ராவ்பகதூர் கா. ச. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் M. L. C, பெருங்கழகத்திற்கு தலைமை வகிக்கவும் பேரன்புடன் இசைந்துள்ளார்கள்.

(Sd.) S. R. முனிசாமி ரெட்டியார்,
உபசாலைச் சபைத் தலைவர்.

---

## நாம் கடமைகளென நினைத்து செய்பனவைகளைக்கொண்டு கடவுள் திருப்தியடைவாரா?

(கைவல்யசாமியார் எழுதுவது.)

அளவற்றஆனந்த சமுத்திரமும், இங்பந்துக்கிருப்பிடமுந் தெய்வமேயாதலின், அவரை அறிந்து சேவிக்குமின்பமே பேரின்பம். சூரியனிலிருந்துண்டாகும் உஷ்ணத்தினால் இப்பிரபஞ்சத்தின்கண்ணுள்ள, சகல வஸ்துக்களும் உஷ்ணமடைந்து, ஜீவராசிகள் உயிர் பெறுவதுபோல், இன்ப ஊற்றாகிய இரக்ஷண்யப் பெருமானோடு அன்னியோந்நிய ஐக்கியமடைபவர்கள்மாத்திரமே அளவற்ற நித்தியானந்த பாக்கியத்தை அனுபவித்து, ஞானானந்தமடைவார்கள் என்பது பெரியவாகளின் வாக்கியம். சரீரபந்தத்தைக் கடந்து அப்பாற்சென்று சாத்விக லெட்சணம் அதிகமாகி செயற்கையற்றவனாய் எப்பொழுதும் நிர்க்க நிஷ்டையாய் இருக்கிறான் முக்தன். இம்முக்த புருஷர்களான வியாசர், சுகர், ஜனகர் முதலியவர்களோடுகூட உலக நன்மையே தங்கள் கருமமென்றிருந்த தர்மர், அர்ச்சுனன், பீஷ்மர், கர்ணன் முதலிய தர்ம உபாசர்களும் இருந்தனர். பௌத்தமதம் கிளம்பி, முக்திக்குச் செல்லும் மார்க்கமே பிரதானமென்று உபதேசித்ததாலும், அதை ஒழிக்கவந்த பிராமண மதவேதாந்தம் ஜனங்களிடம் சரியாய் பரப்பப்படாமையாலும்; அதற்குப் பின்வந்த குருக்கள், ஆசாரிகள் தங்கள் காரியநிமித்தம், புராணங்களையே உலகத்தாருக்குப் பரப்பினதினாலும், முன் தர்மங்களெல்லாம் அழிந்து நாமும், நம் நாடும், வீழ்ந்து கிழாயிற்று. மனிதன் கடவுளை அடைய, சாத்விக குணம் உபதேசிக்கப்படுகிறது. சாத்விக குணம் அதிகமாக, அதிகமாக மனிதன் செய்கை அற்றவனாகிறான். தாமத குணமும் அதிகமாக அவனும் செய்கை அற்றவனாகிறான். இப்பொழுது வெளியிலிருந்து பார்த்தால் நாம் சத்துவகுணம் அதிகரித்த ஸ்திதியில் இருக்கிறோமா? அல்லது தமோகுணம் அதிகரித்திருக்கின்ற ஸ்திதியில் இருக்கிறோமா? என்று நாம் தெரிந்து கொள்ளவேணும். கர்ம செய்கை எல்லாவற்றற்றும் அப்பாலும் உள்ள சாத்விக அமைதியாகிற அவஸ்தையிலிருக்கிறோமா? அல்லது நாம் உயிரற்று, சலனமற்று, ஒருவித செய்கையும் செய்யாமல், செய்ய சக்தியுமில்லாமல் மிக மிகத்தாழ்ந்த தாமசிக அவஸ்தையிலிருந்துகொண்டு எவருக்கும் தெரியாமல, உள்ளுக்குள்ளேயே அழுகி, நாற்றமெடுத்துக்கொண்டிருக்கிறோமா? என்பதை கவனித்தால் பின் சொன்ன ஸ்திதியிலிருக்கிறோமென்பதற்கு நாமும், நம் ராஜ்யமும் சாட்சியாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது புராணங்கள்மூலம் உபதேசிக்கப்பட்டு அதின்படி செய்துகொண்டுவரும் ஈஸ்வர கைங்கரியங்கள், யாதொரு பிரயோஜனத்தையும் கொடுக்காது. கொடுத்ததாகச் சொல்வதற்கும் நியாயமே இல்லை.

கடவுள் எல்லாவற்றிற்கும் பெரியவர் அவரில்லாமல் நாமில்லை. நாமில்லாமல் அவரில்லை. கடவுளைத் தெரிந்த பெரியவர்கள் நமக்கும், அவருக்கும் அநேக கடமைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நாம் இதுவரையிலும் செய்திருக்கும் கடமைகளில், கடவுள் திருப்திப்பட்டிருந்திருந்தால், இத்தனை காலமாக அந்நியபடை எடுப்பால், நமக்கு ஏற்பட்ட கொடுமைகள் ஒழியவில்லையே? பசிக்குச் சோறு இல்லையே? வியாதியும், பஞ்சமும், பிணியும், பயமும் நிலைத்திருக்கிறதே? "நாம் நம் கடமையைச் சரியாய்த்தான் செய்தோம் கடவுள் கடாக்ஷத்தை நம்பேரில் காட்டவில்லை" என்னும் குற்றத்தை அவர் பேரில் சுமத்தலாமா? கேவலம் சத்தியமில்லாமையும், பேராசையும், அசூயையும், இரக்கமில்லாத சுயநலத்தன்மையும் பிரதானமாகவுடைய புரோகிதர்களைத் திருத்தப் பயப்படும் நம் தேசம் கடவுளைக் குற்றம் சொல்லுமா? குற்றத்திலிருந்து நீங்கியவன்றோ கடவுள்.

தங்கத்தாலும், வெள்ளியாலும், பளிங்குகற்களாலும், அநேக கோவில்களைக்கட்டி, எல்லாவித ரெத்தினங்களாலும் ஆபரணங்கள் போட்டு தங்கத்தாலும் வெள்ளியாலும் வாகனங்களமைத்து முகதாலும் சந்தத்தாலும் பல்லக்குசெய்து. தேன், பால், பன்னீர் இவைகளால் குளிப்பாட்டி, பட்டுப்பட்டாளிகள் கட்டி எல்லாவித வாசனை திரவியங்களும் புஷ்ப தினுசுகளும் சாத்தி, பழவர்க்கங்களும் பட்சண வகைகளும் படைத்து, சந்தனம், அகில், சாம்பிராணி, பட்டிப்பால் முதலியவைகளால் தூபமிட்டு அநேகவித அடுக்கடுக்காக தீப ஆலாத்திகளும் எடுத்து கற்பூர தீபமும் காண்பித்து சதிர் சங்கீதம் நடத்தி, பிரபந்தம் பண் வேதமோதி அநேக நாமத்தோடு அர்ச்சனையும் செய்து அஷ்டாங்க சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வணங்கி ஒடுங்கி நின்று சாமியை பள்ளியறைக்கு அனுப்பி கடவுள் பக்தர்களெனச் சொல்லும் பலருக்கும் பலகார பட்சண பாயசத்தோடு பதினெட்டு பச்சடியுஞ்சேர்த்து அன்னமிட்டு தக்ஷிணை கொடுத்து உன்னையே நினைத்து அநேக நாள் விரதமிருந்தும் மாமான மாமெல்லாம் சுற்றியும் படிப்புவந்த பண்டிதர்களெல்லாம் கடவுளையே பாடியும் கடவுளை நினைத்து படித்து எழுந்து இப்படி அநேக ஆயிர வருடங்களாக செய்கிறோம் இப்படி செய்கிறவர்கள் எந்த ஊரிலாவதுண்டா? கொஞ்சநாளாகத்தானே மேல்நாட்டார் கடவுளைப்பற்றி நினைக்க ஆரம்பித்தார்கள். ஒரு ரொட்டித் துண்டும் ஒரு கோப்பை ஒயினும் இப்பொழுதானே இந்த சாமி கண்டது. அவர்கள் மரப்பட்டையை ஆடையாக உடுத்தித் திரிந்த காலத்திற்கு முன்னே நாம் சாமிக்கு கும்பாபிஷேகம் செய்து சாமியின் பெண்டாட்டி பிள்ளை பரிவாரம் முதலியவைகளுக்கு நகைகளெல்லாம் போட்டுவிட்டோமே, சுவாமிக்கு இந்த விஸ்வாசம்கூட இல்லையா? மந்திரமும், யாகமும், அர்ச்சனையும் எங்கு போயிற்று? இத்தனையுஞ்செய்த குடும்பங்களெங்கே? மிராசெங்கே? பண்ணை எங்கே அக்குடும்பத்துப் பிள்ளைகள் எல்லவரிடமும் மண்டியிட்டு பிச்சை கேட்கவா தெய்வம் வைத்தது. அந்த நம் செய்து வந்ததிற்கு வடதேசத்தில் வாத்தியம் வாசிக்கக்கூட வழியில்லையே கொங்குநாட்டில் கிணற்றில் சரியான தண்ணீர் மூன்று வருஷமாக இல்லையே. ஐப்பசி மாதக் கடைசியில் ஒரு மழையை கடவுள் பெய்யும்படியாக செய்திருந்தால் கம்பு ஏராளமாக விளைந்திருக்கும். ஏழைகள் 10 நாளாவது வயிர் நிறைய உண்பார்கள். அந்த தெய்வம் அதையும் கவனிக்கவில்லை. இந்த சமயம் சக்கரவர்த்தி அவுரங்கசீப்பின் கடைசி வார்த்தையின் ஞாபகம் வருகிறது. இவர் மதத்தில் அதிகப் பற்றுடையவர். தங்கள் மகம்மது மதத்தைப் பரப்ப அநேக சண்டைகளும் கஷ்டங்களும் பட்டார். அவருடைய கடைசி காலத்தில் மக்கள் விரோதமும் சத்துருக்கள் பலமும் இன்னும் அநேக மனவருத்தமும் மேற்பட்டது. அப்பொழுது அவர் சொன்னதாவது: "என் கடவுளுக்கு நான் செய்ததெல்லாம் திருப்தியாயிருக்குமென்று நினைத்துச் செய்தேன், அந்த தெய்வம் இப்பொழுது பின்புறத்தைக் காட்டி திரும்பியிருக்கிறது" அது போல நாம் செய்ததெல்லாம் நம் கடவுளுக்கு திருப்தியில்லை. அந்த கடவுள் மேற்கு முகம் திரும்பியிருக்கிறது. இத்தனை நாள் பட்டபாடும் வீணான பணமும் தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படி செய்துவிட்டது. அதனால்தான் நம் தேசம் அடிமைகளை உண்டுபண்ணும் தொழில்சாலையாகி ஒரே ஒரு கூட்டத்தார் உல்லாசமாய் வாழ பயன்பட்டதே ஒழிய தேச ஜன சமூகத்திற்கு யாதொரு நன்மையுஞ் செய்யவில்லை. இங்கில்லாவிட்டாலும் சொர்க்கத்தில், பலனடைவோம் என்று நீங்கள் சொல்லலாம். அப்படியே உங்களிற்கு உபதேசமாகி வருகிறது. அங்கும் மேநாட்டார் வந்து குவிந்துவிடுவார்கள். ஏ பார்த்தா! வீரர்க்கே சொர்க்கம் திறக்கப்படுகிறது என்று பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட உபதேசங்கள் உங்களிற்கு உபதேசிக்கப்படுவதில்லை. யாராவது உபதேசித்தால் நீங்கள் செவி சாய்ப்பதுமில்லை. பின்னும் பின்னும் தகுதியிலாப் படிப்பு ஒழுக்கம் பக்தி இலாத ஆச்சாரி குருக்கள் காலிலே விழுவீர்கள். என் செய்வது; ஏழைக்கும் சுவர்க்கத்தில் இடமுண்டு. ஆனால் கோழைக்கு மாத்திரம் எப்பொழுதும் துக்கம் போவதில்லை.

"ஓங்காரத்தை இடைவிடாமல் ஜபிப்பதினாலும் அதன் பொருளைத் தியானிப்பதினாலும் சகலமுமடையப்பட முடியும். ஈஸ்வர நாமங்களை உச்சரித்ததினால், உண்டாகும் சக்தியினால் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டு விடுகின்றன. ஈஸ்வர சித்தத்தினிடத்திலே தன்னைத்தானே சமர்ப்பித்துக்கொள்ளுகின்றவன் எல்லாவற்றையுமடைகிறான்", மகாத்மாக்களும் சாஸ்திரங்களும் சொன்ன இவ்வார்த்தை உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். ஆனால் நம்மில் ஆயிரக் கணக்கானவர்கள் தமது வாழ் நாள் முழுதும் ஓங்காரத்தைத் தியானிப்பதிலும் ஈஸ்வர நாமத்திலே மெய்மறந்து "உனது இஷ்டப்படியே நடக்கும். நான் உன்னிடத்தில் பரிபூரணமாக சரணாகதியடைந்து விட்

## சுய ராஜ்யக் கட்சிப் பார்ப்பனரின் பதிவிரதா தன்மை

சென்னையின் யோக்கியதையை அறிந்து போக வெளி இடங்களிலிருந்து யார் வந்தாலும் அவர்களை நமது பார்ப்பனர்கள் எப்படியாவது மயக்கி நல்லாய் போட்டு தங்கள் சுவாதீனம் செய்து கொள்ளும் தந்திரமும் சௌகரியமும் நம்மவர்களிடத்தில் இல்லை என்பதை எல்லோரும் அறிந்த விஷயம். தேவஸ்தான சட்ட சம்மந்தமாய் இந்தியா நிர்வாக சபை மெம்பர் ஸ்ரீமான் எஸ் ஆர். தாஸ் இங்கு வந்தபொழுது அவருக்கு பார்ப்பனர்கள் செய்த விருந்தும் பெண்களைக் கொண்டு ஆடல்பாடல் கச்சேரிகள் செய்ததும் மடாதிபதி மகந்துக்களையும் கூட்டி அறிமுகம் செய்து வைத்ததும் அந்த விருந்துக்கு ஒத்துழையாத பார்ப்பனர் என்பவர்கள் முட்டுக்கட்டை பார்ப்பனர் என்பவர்கள் பூரண சுயேச்சை பார்ப்பனர் என்பவர்களும் அரசாங்க உத்தியோகஸ்தர் வெள்ளைக்காரர்கள் ஆகியவர்களின் அரசாங்க சம்மந்தமான களியாட்ட காரியங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்ற பார்ப்பனர்களும் காங்கிரஸையும் தேசிய கொடியும் பிடித்து இரும்புச் சட்டத்தை உடைக்க வேண்டும் என்று சொல்லித் திரியும் பார்ப்பனரும், "அரசாங்கத்திற்கு உடந்தையல்லாத" பார்ப்பனர்களும் மற்றவர்களை நம்பிப் பொருந்தி உலாவும் சர்க்கார் பூஜை என்று சொல்லும் பார்ப்பனர்களும் ஒன்று கூடிக் கொண்டு களியாட்டத்தில் கலந்திருந்ததால் உலகுக்கும் தெரிந்த விஷயமே. அதுபோல

வே இம்மாதத்திலும் இந்தியா நிர்வாக சபையில் இருந்த சர் அலெக்சாண்டர் முட்டிமென் என்கிற ஒரு துரை மகன் வெள்ளைக்காரர் வந்ததற்கு அநேக ஸ்ரீமான் ரங்காச்சாரியார் கொடுத்த விருந்திற்கு ஒத்துழையாமை, முட்டுக்கட்டை, சர்க்கார் சம்மந்த விருந்து பகிஷ்காரம் பூரண சுயேச்சை ஆகிய பல பார்ப்பனர்களின் தலைவருமான ஸ்ரீமான்கள் எஸ். சீனிவாசய்யங்கார் ஏ. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் போய் உண்டு குடித்துக் களித்து பெண்டாட்டிகளோடு ஒன்றாய் உட்கார்ந்து படம் பிடித்துக் கொண்டார்கள் என்றால் இதன் அர்த்தமென்ன? "ஒரு ஊரில் ஒரு புராணப் பிரசங்கியார் ஒரு விதவா ஸ்திரீ ருக்மணியைத் வைப்பாக வைத்துக்கொண்டிருக்கிறார். ஒரு நாள் அவர் புராணப் பிரசங்கம் செய்யும் போது விதவா சம்பந்தம் கூடாது என்றும் அது இருவருக்கும் பாவமென்றும் மேல் லோகத்தில் நெருப்பில் காய்ச்சிய இரும்புத் தூணை கட்டிப் பிடிக்கச் சொல்லுவார்கள் என்றும் அதனால் சிறிய குறைந்தபாகமென்றும் இன்னம் பலவிதமாக உபதேசம் செய்தார். சாஸ்திரியாரின் வைப்பாட்டியான விதவை அம்மாள் அவர்களும் அந்தப் பிரசங்கத்திற்கு போயிருந்தார்கள். சாஸ்திரியார் வீட்டுக்கு வந்தவுடன் நீர் இனிமேல் என்னைத் தொடாதீர் இவ்வளவு பாவமும் தோஷமும் மேல் லோகத்தில் இவ்வளவு கஷ்டமும் இருக்கிற சங்கதி எனக்கு இதுவரையில் தெரியாமல் நான் திரிகரண சுத்தமாய் பட்சம் புண்ணியம் என்று சொல்லி என்னை ஏமாற்றி விட்டீர் போனதுபோகும் இனிமேலாவது என்று சொல்லிவிட்டாள். சாஸ்திரியார் உடனே அம்மாள் காலில் விழுந்து நான் அநேகமாயிரம் பேர்களை ஏய்த்து வயிறு வளர்க்கச் சொன்னதேயல்லாமல் நமக்கு உணர்த்துவது அல்ல கட்டுப்பாடாக்காது. எங்காவது ஒரு ஸ்திரீ எவ்வளவுதான் பதிவிரதையானாலும் புருஷனில்லாமல் இருக்க முடியுமா? புருஷன் காலமானபின்னும், எப்படிப்பட்டவளானாலும் ஸ்திரீ இல்லாமல் இருக்க முடியுமா? இப்படிச் சிறு சங்கதிக்கு எங்காவது பாவமும் தோஷமும் ஏற்படுமோ?" என்று சாஸ்திரியார் சமாதானம் போதித்தாராம். அதுபோல் நமது சென்னைப் பார்ப்பனர்கள் வெளியில் செய்யும் புராணப் பிரசங்கம் வேறு. தாங்கள் நடந்துகொள்ளும் இயற்கை வேதாந்தம் வேறு. இதை நமது பாமர ஜனங்கள் சரிவர உணராமல் ஏமாந்து போகிறார்கள் என்ன செய்வது வயிற்றுக் கொடுமையும் பேராசையும் நம்மவர்களைப் போட்டு நசுக்கும் போது எப்படி யோக்கியமாகவும் ஏமாறாமலும் இருக்க முடியும்.

---

### திரு. R K ஷண்முகம் செட்டியார் B.A.B.L., M.L.A., அவர்களுக்கு ஓர் சிற்றுண்டி விருந்து.

---

ஆஸ்டிரேலியாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய பார்லிமெண்டு மஹாநாட்டிற்கு அகில இந்திய மகாஜனங்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கனுப்பப்பட்டவரும், இந்திய சட்டசபை அங்கத்தவரும் அகில இந்திய சுயராஜ்யக் கட்சியின் காரியதரிசியும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியுமாகிய கோயமுத்தூர் திருவாளர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்களுக்கு திருவாளர் பெ. பெரி. சுப்பிரமணிய செட்டியாரவர்கள் 2-12-26 வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு தமதில்லத்தில் ஓர் சிற்றுண்டி விருந்து நடத்திவைத்தார்கள். விருந்து மிகச் சிறப்பாகவும் கௌரவமாகவும் நடைபெற்றது. அதி காலை சுமார் 300 பேர்கள்வரை விருந்தினராக விஜயம் செய்திருந்தார்கள். எல்லோரும் சிற்றுண்டி அருந்தியபின் பின்னர் திரு. சுப்பிரமணிய செட்டியாரவர்கள் திரு. ஷண்முகஞ் செட்டியாரவர்களின் ஊழியங்களையும் பெருந்தன்மையையும் மிகச் சுருக்கமாகக்கூறி திரு. செட்டியாரவர்களை சிறிது நேரம் தமிழில் பேசும்படி வேண்டிக் கொண்டார்கள். திரு. செட்டியாரவர்கள் நீண்ட கரகோஷங்களுக்கிடையே எழுந்து தனது ஆஸ்டிரேலியா பிரயாணத்தைப் பற்றியும் பிற நாட்டைப் பற்றியும் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கேட்போர் மனமுருகுமாறு மிக்க அழகாக தமிழில் சுமார் 20 நிமிடம் பேசினார்கள். திரு. செட்டியாரவர்களின் பேச்சு முடிந்ததும் முறையே திரு. வி. எஸ். ஜான் அவர்களும், திரு. சுப்பிரமணிய செட்டியாரவர்களும் வந்தனோபசாரம் கூற சரியாக 6-10 மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது. சிற்றுண்டி விருந்து கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் திருவாளர்களான பி. பி. உம்பிர்ஜி ஜே. பி. சி. பி. அல்லாப் பிச்சை ராவுத்தர் ஜான்சன்ஸ் டாக்டர் ஐ டேவிட், டாக்டர் ஜார்ஜ், ஆர். மோகா, டாக்டர் சி. சி. பெருமாள் பிள்ளை, லாரி முத்துக்கிருஷ்ண அச்சு எம். பாண்டியா, சி. எம். கனி (செகியமித்திரன் பத்திராதிபர்.) பண்டிதர் ப. இராமசாமி முதலியார், ஏம்பியார் ராம. அரு அரு. ராமநாதன் செட்டியார், பழ. செ. லெ. பழ. அழகப்ப செட்டியார் உ. அ பெரி. மு. அரு அடைக்கப்ப செட்டியார், கு. பழ. சு. பழ. சுப்பிரமணியம் செட்டியார், பி. ச. அரு. அரு. கருப்பன் செட்டியார்; மு. ராம. மு. மு. காசிவிசுவநாதன் செட்டியார், வீர கருப்பண செட்டியார், மு கு ம முத்துராமன் செட்டியார், கரு முத்து அரு தியாகராஜன் செட்டியார், வ பழ ள சாமிநாதன் செட்டியார், அழ சோம சோமசுந்தரம் செட்டியார், அழ சுப சேதுராமன் செட்டியார், மு கு ராம வெங்கடராமன் செட்டியார், பெ ராம முத்தைய செட்டியார், முரு அரு சுப சுப்பிரமணிய பிள்ளை, முரு அரு பழ முத்தையா செட்டியார், ப செ செ மு சிதம்பரம் செட்டியார், சுப பெ பழனியப்ப செட்டியார், அ ராம சுப நாகப்ப செட்டியார், சர் சி சாமிநாதஞ் செட்டியார், கரு மெ பழனியப்ப செட்டியார், மு உ சுப பொன்னையா செட்டியார், கரு ராம ராமசாமி செட்டியார், மு செ சு சுப்பிரமணியன் செட்டியார், அழ ஆறு அழகப்ப செட்டியார், பெரி ந கரு ராமசாமி செட்டியார், வ வீர வ வள்ளியப்ப செட்டியார் கு மு ராமன் செட்டியார், ஆரு சுப சுப்பிரமணியன் செட்டியார், மு ராம மு ராமன் செட்டியார், மு ப பழனியப்ப செட்டியார், க ப க கந்தசாமி செட்டியார், ஆ ராம ரெங்கசாமி நாயக்கர், மா மு வடுகையா பிள்ளை, வீ ஏ சங்கர நாராயண பிள்ளை, டி தெய்வநாயகம் பிள்ளை, ஏ எஸ் ஜோன் கே செல்லையா, எ வி கிருஷ்ணப்பர், எஸ் கணபதி, ஆகியோர் முக்கியமானவர்கள்.

"சத்தியமித்திரன்"

---

டேன்" என்று உச்சஸ்தாயில் கூவிக் கொண்டிருந்தும் ஒன்றையும் அடையாமல் இருப்பதை நாம் பார்க்கவில்லையா? உண்மையில் கடவுளை யாரால் தியானிக்க முடியும் என்பதை இதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். அவனுடைய மனமானது சுத்தஞ் செய்யப்பட்டிருக்கிறதோ அவனாலேயே தியானிக்க முடியும். கர்மத்தின் பேரில் தர்மம் கட்டப்பட்டிருக்கிறது இப்பொழுது நாம் செய்துகொண்டு வருவது கர்மமல்ல. தர்மமென்பது சமூக முன்னேற்றத்திற்கு உண்மையாய் தைரியமாய் உபேக்ஷா புத்தியுடன் தன்னால் இயன்றதை செய்கிறவனுக்கே கோழைத்தனம் நீங்கும். அவனுக்கு தியாகியின் வாக்கும் பகவான் பக்தியும் நிலைக்கும். ஆயிரக் கணக்கான வருடங்களாக தேச முழுவதும் ஈஸ்வர நாமத்தினாலே ஆகாயத்தை நிரப்பிக் கொண்டும் தனது பிரார்த்தனையை ஈஸ்வரனிடத்திற்கு அனுப்பிக் கொண்டும் இருக்கிறது. அதற்கு அவர் ஒருபொழுதும் செவி சாய்க்கிறதில்லை. அவர் ஏன் செவி சாய்க்க வேண்டும். மனிதன் கூட மூடனுடைய கூச்சலைக் கேட்காமலிருக்கும்போது ஈஸ்வரன் கேட்பாரென்று நாம் நினைக்கலாமா? ஆனதால் அவர் எப்படி நாமிருந்தால் செவி சாய்ப்பார் என்றும் எப்படி அவருக்கு நம் கடமைகளை செலுத்தினால் அவர் கருணை புரிவார் என்றும் அடுத்த வியாசத்திலெழுதுவோம்.

(இதன் அடுத்த வியாசம் 13-வது பக்கம் பார்க்க.)

## ஜஸ்டிஸ் கக்ஷி தோல்வியடைந்ததேன்?

ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை பரப்புவதற்குப் போதுமான பத்திரிகைகள் இல்லை. ஜஸ்டிஸும் திராவிடனும் நூற்றுக்கணக்காகத்தான் போகின்றன. சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைக்கு விரோதமான பத்திரிகைகள், இந்து, நியூ இந்தியா, சுயராஜ்யா, டெய்லி எக்ஸ்பிரஸ், டுடே, டுநல், மெயில், தமிழ் சுயராஜ்யா, சுதேசமித்திரன், நவசக்தி, தமிழ்நாடு, ஆந்திர பத்திரிகா, இவைகள் ஆயிரக்கணக்காக செல்வாகின்றன. இப்பன்னிரண்டு பத்திரிகைகளில் ஒன்பது பத்திரிகைக்கு பார்ப்பனர்களே பத்திராதிபர். இப்பத்திரிகைகள் தேர்தல் கூட்டங்களில் நடக்கும் தலைவர்களுடைய பிரசங்கத்தையும் ஜஸ்டிஸ் கட்சி தேசத்திற்காக செய்த நல்ல காரியங்களையும் வெளிப்படுத்துகிறதில்லை. இதனாலேயே பெரும்பாலும் பாமர ஜனங்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி செய்த நல்ல வேலைகளை தெரிந்துகொள்வதற்கு இடமில்லாமல் போயிற்று. ஒரு கட்சியை தாழ்வுபடுத்துவதற்கோ அல்லது மேன்மைப்படுத்துவதற்கோ பத்திரிகை பலம்தான் வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பதற்கு குறைந்தது நான்கு அல்லது ஐந்து பத்திரிகைகள் கட்டாயம் வேண்டும்.

2. ஜஸ்டிஸ் கட்சி தேர்தல் காலங்களிலும் மற்ற காலங்களிலும் பிரச்சார வேலைகள் சுயராஜ்யா கட்சியைப்போல் அதிகமாக செய்கிறதில்லை. சில இடத்தில் செய்த போதிலும் இதுவரைக்கும் கட்சி செய்த நன்மைகளையும் இனிமேல் செய்யப்போகிற வேலைகளையும் எடுத்துச் சொல்லாமல், பார்ப்பனர்களையே அதிகமாக கண்டிக்கிறதும், தாடிவாலா என்றும் புளியோதரை, பொங்கல், ஆமவடை என்றும் வேடிக்கையாக சொல்லுகிறார்கள். இது பெரும்பாலும் பொதுமக்களுக்கு பிடிக்கவில்லை. ஆதலால் பொதுமக்கள் மனதில் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை நன்றாய் பதியும்படி வேலை செய்யவேண்டும்.

3. ஜஸ்டிஸ் கட்சி தொழிலாளர்களுக்கு சில நன்மைகள் செய்தபோதிலும், அவர்களிடத்தில் நெருங்கி பழகுவதில்லை. அவர்களுக்கு தலைவர்களாகவும் இருப்பதில்லை. தொழிலாளர்கள் எந்தக்கட்சியில் இருக்கிறார்களோ அந்தக் கட்சிதான் பலமுடையதாயிருக்கும்.

4. ஜஸ்டிஸ் கட்சி தேர்தல் காலங்களில் விளம்பரம் அதிகமாய் செய்கிறதில்லை, செய்வதற்கும் இடமில்லை. ஏனென்றால் நம் நாட்டிலிருக்கும் சிற்றுண்டிசாலைகள் ஆயிரக்கணக்காக பார்ப்பனர்களுடையதாகவே இருக்கின்றன. ஒவ்வொரு சிற்றுண்டிசாலையிலும் சுயராஜ்யா விளம்பர அட்டை மாட்டி வைத்திருக்கிறது. ஒவ்வொரு சிற்றுண்டி சாலைக்கு தினந்தோறும் சுமார் 500 ஜனங்களுக்கு மேல் போகிறார்கள். அவர்கள் மனதில் சுயராஜ்யா விளம்பரமே படிகிறது. அதுவுமல்லாமல் சிற்றுண்டிசாலை பார்ப்பனனும் வருகிற பாமர ஜனங்களை மயக்கி சுயராஜ்யா கட்சிக்கே ஓட்டு கொடுக்கும்படி சொல்லுகிறான். ஆகையினால் பார்ப்பனர் அல்லாத சிற்றுண்டி சாலைகள் அதிகமாய் ஏற்படுத்த வேண்டும்.

5 ஜஸ்டிஸ் கட்சி மகமதியர்களை நன்றாய் வசப்படுத்தவில்லை. அவர்கள் “கிலாபத்துக்கு” ஆபத்து வருங்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி முழு பலத்தை கொடுக்கும் என்ற நம்பிக்கை வரும்படி செய்ய வேண்டும். மகமதியர்களுக்கு விரோதமாக பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்ட “இந்து மகா சபா” என்றதை எடுத்துகாட்ட வேண்டும். மகமதியர்கள் பெரும்பாலும் சேர்ந்தால் தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு முழு பலம் வரும்.

6 ஜஸ்டிஸ் கட்சி தீண்டாத மக்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக பாடுபட்டிருக்க வேண்டும். முக்கியமாக தீண்டாமையை ஒழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

7 பார்ப்பனரல்லாத பூணூல் தரித்த கோமுட்டி செட்டியார்மார்கள், பேரிச் செட்டியார்மார்கள், வாணியச் செட்டியார்மார்கள், தேவாங்க செட்டியார்கள், ஆசாரிமார்கள் ஆகிய இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பார்ப்பனருடைய தந்திரத்தையும், சூழ்ச்சியையும், சாஸ்திர ஆராய்ச்சி மூலமாய் எடுத்துச் சொல்லி, ஜஸ்டிஸ் கட்சி நாட்டிலிருக்கும் எல்லாவித மக்களுக்கும் அரசியல் முதல் எல்லாவற்றிலும் சமத்துவமும் சமபாகமும் வேண்டுமென்கிறதை எடுத்துக் காட்டி அதிகமாக பிரச்சார வேலை செய்ய வேண்டும்.

8 சில பார்ப்பனரல்லாத தலைவர்கள் தங்களுக்கு அதிகாரம் வந்துவிட்டால் சில வேலைகளை பட்சபாதமில்லாமல் பார்ப்பனர்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். அதனால் பார்ப்பனரல்லாத சில மாணவர்களும், மற்றவர்களும் வருத்தமுண்டாகி தேர்தல் காலங்களில் ஜஸ்டிஸ் கட்சியை சரியாக ஆதரிக்கிறதில்லை. சென்ற ஆண்டில் “இந்து மத பரிபாலன மசோதா” கூட்டத்திற்கு தலைவராய் பார்ப்பனராகிய ஸர். டி. சதாசிவ அய்யரை பனகால் ராஜாவால் நியமிக்கப்பட்டார். ஸர். டி. சதாசிவ அய்யர் இதன் மூலமாயிருக்கும் உத்தியோகங்களை எல்லாம் பார்ப்பனர்களுக்கு கொடுத்து விட்டார். பார்ப்பனர்களுக்கு இருக்கும் ஜாதி அபிமானம் பார்ப்பனரல்லாதவர்களுக்கு கிடையாது.

9 ஜஸ்டிஸ் கட்சியில் சரியான ஒழுங்கு கிடையாது. சரியான ஒற்றுமையும் கிடையாது. ஒரு இடத்திற்கு இரண்டு பேரும், இரண்டு இடத்திற்கு மூன்று பேரும் நின்று சுயராஜ்யக்காரர்களுக்கு இடம் கொடுக்கிறார்கள். சுயராஜ்யக்காரர்கள் தங்களுக்கு எவ்விடத்தில் பலமில்லையோ அவ்விடத்தில் தந்திரமாக சுயேச்சைக்காரரென்று சொல்லி வெற்றி பெற்றுவிட்ட பிறகு சுயராஜ்யா கட்சிக்காரனென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அந்த மாதிரி அரசியல் தந்திரம் ஜஸ்டிஸ்காரரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

10 ஜஸ்டிஸ் கட்சியை உண்டாக்கின

## “பெருந்தன்மையும், கண்ணியமும் வேண்டுமானால் மன்னிப்பு கேட்டுக்கொள்ளவேண்டியதே.”

பிரபல தேசிய வாதியும், சிறந்த சுயராஜ்யக்கட்சித் தலைவரும், கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரும், மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினருமான மாயவரம் ஸ்ரீமான் பி. கே. இராமசுவாமி செட்டியார், நமக்கு பின்வருமாறு எழுதுகிறார்.


தமிழ் மாகாண 32-வது தேசிய மகாநாடு ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் தலைமையின்கீழ், சென்னை கோகிலே ஹாலில் நடைபெற்றது. மகாநாட்டின் இரண்டு நாள் நடவடிக்கைகளையும் சுதேசமித்திரனில் பார்த்ததிலிருந்தே மகாநாட்டு அதிகாரிகள் மிக வருந்தத்தக்க விதமாக நடந்துகொண்டார்கள் என உணர்கிறேன். மகாநாட்டின் அபிப்பிராயபேதமுடைய நபர்களுக்கு சர்வ சாதாரணமாய் கொடுக்கக்கூடிய ‘சுதந்திரம்’ கூட கொடுக்க மறுக்கப்பட்டதை யோசிக்குமளவில், இக்கோகிலே ஹாலில் காங்கிரஸ் வாதிகளாய் விளங்கியவர்களைப்பற்றி—இதுவரை சுயராஜ்யக் கட்சியின் விரோதிகளாய் உள்ளவர்கள், சொல்லிவந்த கூற்றுகளை ருஜுப்படுத்திவிட்டார்கள். வெற்றி அடைந்ததாக கூறப்படும் சுயராஜ்ய கட்சிக்கு உண்மையில் ஏற்படவேண்டிய பெருந்தன்மைக்கு பங்கமேற்பட்டுவிட்டது. ஆதலால் மகாநாட்டு நிர்வாகிகள் தங்களின் கேவலமான நடத்தைக்கு உடனே மன்னிப்புகேட்டுக்கொண்டு பெருந்தன்மையை நிலைநாட்ட மீண்டும் முயலுவார்களென நம்புகிறேன். “ஹிந்து”, “சுதேசமித்திரன்”, “சுயராஜ்யா”, “நவசக்தி”, “தமிழ்நாடு”, “குடி அரசு”, “திராவிடன்” முதலிய பத்திரிகைகளுக்கும் இதன் காபிகள் அனுப்பப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் சிறந்த தேசியவாதி என்பதுடன், இன்னமும் பிராமண தேசியவாதிகளில் யோக்கியர்கள் இரண்டொருவர் உண்டு என்கிற நம்பிக்கையுடையவர். மித்திரன் ஆசிரியர், மூர்த்தி இவர்களின் அந்தரங்க நண்பர், குருகுல போராட்ட காலத்தில் கனம் டாக்டர் நாயுடுவின் கொள்கையை ஒப்புக்கொள்ளாமல் இருந்தவர் இத்தகைய ஒரு கனவான் மித்திரனைப்பார்த்தே, மித்திரன் கூட்டத்தாரின் தனிச் செய்கையை கண்டிக்க ஆரம்பித்தது, தமிழர்களின் புத்துணர்ச்சியையே காட்டுகிறது.

---

டாக்டர் நாயர் பெருமானை மறந்துவிட்டார்கள். அவர் இக்கட்சிக்காக 7000 மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள, இங்கிலாந்து தேசத்தில் உயிர் துறந்தார். அவருடைய ஆண்டு விழாவையும் கொண்டாடுவதில்லை. அவருடைய ஞாபக சின்னமாக ஒரு உருவச்சிலையும் செய்யவில்லை. தலைவர்களை எவ்வளவுக் கெவ்வளவு மேன்மைப் படுத்துகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அக்கட்சி மேன்மை பட்டுவரும்.

நடுநிலைமையாளன்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

## புது ஆண்டு பரிசு.

### 1927-ஞு ஜனவரி-மீ த்தில் "குடி அரசு"ப் பிரதியின் எண்ணிக்கை 5000த்தையாவது தாண்டிவிட வேண்டாமா?

அப்படியானல் ஒவ்வொருவரும் மும்மூன்று புது சந்தாதாரர்களை சேர்த்துக் கொடுங்கள் :—

அப்படிக்கில்லாமல் குடி அரசே! குணக்குன்றே! அஞ்சா வீரமே! உண்மை அவதாரமே! சுயமரியாதைச் சூரியனே!

…………என்று கவிபாடுவதில் ஒரு பலனுமில்லை காரியத்தில் காட்டுங்கள்.

## குடி அரசு.

அக்ஷய-ஞு மார்கழி-மீ 11-௳

## பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தலைவர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

சென்னை மாகாணத்தில் சிறப்பாக தமிழ் நாட்டில் சுமார் 10 வருஷங்களுக்கு முன்பாக பார்ப்பனரல்லாதார் சங்கம் ஏற்பட்டதும் அதை ஏற்படுத்த ஸ்ரீமான் டாக்டர், நாயர் அவர்கள் முதன்மையாகவும், சர் தியாகராய செட்டியார் உதவியாகவும் இருந்து அதை உலகினர் ஒப்புக்கொள்ளும்படி செய்து தங்களது கொள்கைகளையும் நிலை நிறுத்தியதையும் உலகமறிந்த விஷயம்.

ஆனால் இன்றையதினம் நம்மில் பெரும்பான்மையான மக்கள் அக்கட்சியின் பெயரைச் சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுகிறார்கள். காரணமென்ன? தமிழ் நாட்டில் இக்கட்சியின் கொள்கைகளைப் பிரசாரம் செய்ய பணமில்லாதிருந்ததா? பத்திரிகை இல்லாதிருந்ததா? உத்தியோகமும், அதிகாரமும் இல்லாமலிருந்ததா? எல்லாமிருந்தும் இக்கெதி ஆவானேன்? எதிரிகளின் சூழ்ச்சியும், தந்திரமும் என்று சொல்லலாம். ஸ்ரீமான்கள் நாயரும், செட்டியாரும் உள்ள காலத்திலும இவ்வெதிரிகள் இருந்தவர்கள் தானே? இப்பொழுதுமாத்திரம் இவர்கள் சூழ்ச்சி பலிப்பானேன்? ஒரு சமயம் நமக்குள்ளாகவே எதிரிகள் ஏற்பட்டுவிட்டார்கள் என்று சொல்லலாம்.

அப்படியானல் இனிமேலாவது நமக்குள்ளாக எதிரிகள் ஏற்படாமலிருக்க இப்போது என்ன செய்யப்போகிறோம்? இனிமேலாவது எதிரிகளின் சூழ்ச்சியிலிருந்து தப்புவதற்கு என்ன செய்யப்போகிறோம்? மகாநாடு கூடிக்கலைந்தால் போதுமா? முதலாவது நம்முடைய லட்சியம் என்ன என்பதை பாமர ஜனங்கள் அறியும்படி செய்திருக்கிறோமா? பாமர ஜனங்களின் அனுதாபத்தைப்பெற நாம் ஏதாவது வழி செய்தோமா? கவலையாவது கொண்டோமா? நமது மக்களின் உண்மையான தேவை என்ன என்பதிலாவது நாம் அபிப்பிராய பேதமில்லாமல் இருக்கிறோமா? நமது நாட்டினிடமாவது, நமது மக்களிடமாவது அபிமானம் உள்ளவர்கள் என்பதற்கு நம்மிடம் ஏதாவது ஒரு அடையாளமிருக்கிறதா? உத்தியோகங்கள் பெற்றோம். பட்டங்கள் பெற்றோம். பதவிகள் பெற்றோம். இதனால் நமது மக்களுக்கு அடிப்படையான நன்மை என்ன செய்தோம்? பார்ப்பன ஆதிக்கம் வளராமல் இருக்க இவைகளை உபயோகித்துக்கொண்டோம் என்கிறவரையில் இவற்றைப் பெற்றது சரி. பாமர ஜனங்கள் மூட நம்பிக்கையுடையவராய், ஏழை ஜனங்களாய், தொழிலாளர்களாய், கூலிகளாய் உள்ள நமது மக்களின் குறைகளை நீக்கி என்ன நன்மையை உண்டாக்கினோம்? பார்ப்பன மாய்கையில் மூழ்கி விவகாரத்தில் சிக்கி, அல்லல்பட்டு அழியும் குடியானவர்களுக்கு நாம் என்ன செய்தோம்? அறிவீனத்தில் மூழ்கி, மது வருந்தி, ஒழுக்கங்கெட்டு நாசமாகும் ஏழைக் குடும்பங்களுக்கு என்ன பந்தோபஸ்து செய்தோம்? உத்தியோகம் ஒப்புக்கொண்ட அளவில் உத்தியோகத்தைக்கொண்டு எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவு செய்திருக்கிறோம் என்கிற பதில் போருமா? உத்தியோகத்திற்கு வெளியில் செய்யக்கூடிய வேலைகளில் ஏதாவது செய்தோமா? நமது மனதையே நாம் கேட்டுப் பார்ப்போம். நமது எதிரிகளான பார்ப்பனர்கள் தேசத்தின் பெயரையும் காங்கிரஸ் பெயரையும் சுயராஜ்ஜியம், உரிமை என்கிற பெயர்களையும் வைத்துக் கொண்டு பாமர ஜனங்களை எமாற்றி உத்தியோகமும் பதவியும் பெற்று தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்ளுகிறார்களே அதுபோலவும, நம்மில் பல கூலிகள் பார்ப்பனருக்கு ஒத்துப்பாடி அவர்களும் தேசம் சுயராஜ்யம் தேசியம் உரிமை என்பவைகளைச் சொல்லி வயிர் வளர்க்கிறார்களே அதுபோலவும், நாமும் செய்தால் பார்ப்பனரல்லாதார் மக்கள் முன்னேறி விடுவார்களா? இவற்றை மகாநாட்டுக்கு வரும் பொது ஜனங்கள் நன்றாய் யோசிக்க விரும்புகிறோம். உத்தியோகப் பதவி பட்டம் பெற வேண்டாம் என்று நாம் இப்போது சொல்ல வரவில்லை. ஆனால் அதுவே நமது லட்சியமல்லவென்பதையும் அதனாலேயே நமது குறைகள் முழுதும் நிவர்த்தியாகி விடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. ஆதலால் உண்மையில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு தகுந்த கொள்கைகளும் திட்டங்களும் வகுத்து பாமரமக்களிடை தாராளமாய் பிரசாரம் செய்யத்தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உத்தமமான தலைவர்களையும் உண்மையான தொண்டர்களையும் உறுதியான கொள்கைகளையும் யோக்கியமான பிரசாரகர்களையும் கொண்டு சரியானபடி ஒரு வருஷத்திற்கு வேலை செய்தால் நமது சமூகம் சுயமரியாதையையும் சுதந்தரத்தையும் அடைந்து விடலாம். இதற்கு முதலாவது எல்லோரும் கதரை ஒப்புக்கொள்ள வேண்டும். தீண்டாமை விஷயத்தில் வெளிப்படையாய் சொல்லிவிட வேண்டும். அதாவது மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயத்தில் ஆக்ஷேபனை உள்ளவர்கள் சுதந்திரத்துக்கும் சுயமரியாதைக்கும் விரோதிகள் என்றே சொல்லுவோம். அங்கத்தினர் உறுதி மொழிப் பத்திரத்திலேயே இவைகள் குறிக்கப்பட வேண்டும, மற்றபடி "ஒத்துழையாமை"யோ ஒத்துழைப்போ" பரஸ்பர ஒத்துழைப்போ "முட்டுக்கட்டையோ" "சட்ட வரம்பிற்குள் பட்ட கிளர்ச்சியோ" "வெளிப்பட்ட கிளர்ச்சியோ" "பிரிட்டிஷ் குடைக்குள் சுயராஜ்ஜியமோ" "குடைக்கு வெளியில் சுயராஜ்ஜியமோ" "இரட்டை ஆட்சியோ" "ஒத்தை ஆட்சியோ" "சாதாரண சுயராஜ்ஜியமோ" "பூரண சுயராஜ்ஜியமோ" அவரவர்கள் கொள்கை அவரவர்களுடனேயே இருக்கட்டும். இதுசமயம் இவைகள் எல்லாம் அடியோடு புரட்டு என்றும் பார்ப்பனர்களும் ஆங்கிலம் படித்தவர்களும் பாமர ஜனங்களையும் சர்க்காரையும் எமாற்றி வயிறு வளர்க்கச் செய்யும் தந்திரங்கள் என்றும் நாம் உறுதியாய் நம்புவதால் அதைப்பற்றி யாருக்காவது கெடுதியோ நன்மையோ ஒன்றும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆதலால் அவைகள் ஒவ்வொரு மனிதனின் தனித்தனி அபிப்பிராயமாய் இருந்து கொள்ளலாமே தவிர சங்கத்தின்

# வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.

—o—

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்றால் நமது பார்ப்பனர்கள் ஒரே கூச்சலாக "தேசம் போச்சுது" "ஒற்றுமை குலைந்தது" "வகுப்புவாதம் மிகக்கெட்டது" என்று ஒரே கூச்சலாக எல்லாப் பார்ப்பனர்களும் ஒன்றாய்க் கூப்பாடு போடுவதுடன் கூலி கொடுத்தும் நம்மவர்களைப் பிடித்தும் அப்படியே கத்தச் சொல்வதும் நாம் எல்லோரும் அறிந்த விஷயமே. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஏன் பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள் என்பதற்கு காரணம் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் கொஞ்ச நாளைக்கு முன்பு "பொய்மான் வேட்டை" என்று நவசக்திக்கு எழுதிய ஒரு வியாசத்தில் தன்னை அறியாமலே காட்டிவிட்டார். அதாவது "வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது பார்ப்பனர்களை இனி நீங்கள் நாட்டுக்கு தொண்டு செய்ய வேண்டியதில்லை யென்று ஒதுக்கிவைப்பதாகும். பல்லாயிர வருஷங்களாக நாட்டுக்கு தொண்டு செய்துவந்த ஒரு ஜாதியினரை இவ்வளவு சுலபத்தில் (வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் மூலம்) ஒதுக்கிவிட முடியாது. அறிவும் பயிற்சியும் திறமையும் கொண்டவர் நாட்டிற்கு வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். இதிலுள்ள மற்ற அம்சங்களைப்பற்றி இப்போது கவனிக்காவிட்டாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பார்ப்பனருக்குத்தான் கெடுதி என்பதாக அவரே வெளியிட்டிருக்கும்போது மற்ற பார்ப்பனர்கள் ஆக்ஷேபிப்பதற்கு காரணம் வேண்டுமா? அதுமாத்திரமல்லாமல் இப்பார்ப்பனர்கள் தங்களுக்கு கெடுதி என்று வெளிப்படையாய்ச் சொல்லிக்கொள்ள யோக்கியதையும் தைரியமும் இல்லாததால் தேசத்திற்கு கெடுதி என்று வெள்ளைக்காரர் சொன்னார்கள். ஜர்மனியர் சொன்னார்கள். ஜப்பானியர் சொன்னார்கள். துருக்கியர் சொன்னார்கள் என்றும் சமாதானமும், ஆதாரமும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதானது "பள்ளிக்கூடத்து குழந்தைகள், பள்ளிக்கூடம்போக திருட்டுத்தனம் செய்துவிட்டு, மறுநாள் போகும்போது உபாத்தியாயர், நேற்று ஏன் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை என்று கேட்டால், எனக்கு நேற்று வயிற்றுவலி சார் என்கிறதும், வயிற்றுவலி என்றால் என்ன என்று கேட்டால், அதென்னமோ எங்கள் அம்மா சொன்னாங்கோ சார் என்கிறதும்" போல் இருக்கிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கெடுதி, கெடுதி என்றால் யாருக்குக் கெடுதி? பார்ப்பனருக்கு கெடுதி. இதற்காக அவர்கள் மற்றவர்களை ஒருவருக்கொருவர் உதை போட்டுக்கொள்ளும்படியும் வைது கொள்ளும்படியும் தங்களைவந்து அடைக்கலம் புகும்படியும் செய்து வருகிறார்கள். கொஞ்சநாளைக்கு முன்பு வைசிராய் பிரபுவும், கவர்னர் பிரபுவும் "வகுப்புவாதம் கூடாது" என்று சொன்னார்கள் என்றும் அதை தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டு பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியாய் பார்க்கிறபோது மேன்மை தங்கிய வைசிராய் பிரபுக்கும், கவர்னர் பிரபுக்கும் முதலாளிகளான வெள்ளைக்காரர்கள் கான்பூரில் கூடிய எல்லா இந்திய ஐரோப்பிய சங்கத்தின் மகா நாட்டில் இந்தியாவின் இயற்கை நிலையை உத்தேசித்து வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இந்தியாவுக்கு அவசியம் வழங்க வேண்டும் என்பதாகவே பேசி இருக்கிறார்கள். தவிரவும் தற்காலம் நடைபெறும் அரசியல் விவகாரங்களில் வகுப்பு பிரச்னைகள் இல்லாத இலாகாவோ ஸ்தாபனமோ தேர்தல்களோ கண்டிப்பாய் இல்லை என்றே சொல்லலாம். தவிரவும் அரசாங்கத்தாரால அளிக்கப்படும் உத்தியோகங்களும் நியமன பதவிகளும் வகுப்பு பிரசனையின் பலனாகவே அளிக்கப்பட்டு வருவதும் பொது ஜனங்களாலும் கேழ்க்கப்பட்டு வருவதும் இரகசியமானதல்ல. அப்படியானால் எதற்காக இனியும் கேழ்க்க வேண்டும் என்கிற கேழ்வி பிறக்கலாம். உத்தியோகங்களும் பதவிகளும் சர்க்கார் தயவாலும் தேர்தல்களில் ஸ்தானங்கள் பார்ப்பனர்களின் தயவாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பெறக் கூடியதாயிருப்பதால் மக்கள் தங்கள் தங்கள் தேச சமூக நலத்தையே கவனிக்காமல் அநேக சமயங்களில் தேசத்தையும் வகுப்பையும் சர்க்காருக்கும் பார்ப்பனருக்கும் காட்டிக்கொடுத்தும் துரோகம்செய்து ஸ்தானம் பெறவேண்டியிருக்கிறது. உதாரணமாக சட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருந்தால், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு வியாக்கியானம் செய்வதிலேயே ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் போன்றவர்கள் சமயத்திற்கு தகுந்தபடி பார்ப்பனர்களுக்கு பயந்து கொண்டு பேச வேண்டியதில்லை. ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அரசியலில் தலையிடும்போதே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கட்சியார் மூலமாகவே அ, ஆ, படித்தவர் ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம்செட்டியாரும் அதுபோலவே வகுப்பு பேரைச் சொன்னதினால்தான் அரசியல் உலகில் தீன்னியர்களுக்குமனிதர்களாககாணப்படுகிறார். ஸ்ரீமான் முத்தைய முதலியார் வகுப்புவாரி பேச்சு வெளியான பிறகுதான் அரசியல் உலகில் அப்படி ஒருவர் இருக்கிறார் என்று தெரியப்பட்டார். டாக்டர் வரதராஜுலு நாயுடு என்பவரும் வகுப்புவாரிப் பேச்சில்லாமல் இருந்தால் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் அரசியலில் கண்ணுக்குத் தென்படாத நிலையில் இருப்பார். ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் என்பவரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பொது மக்கள் ஞாபகத்துக்கு வரக் கூடாதவராகவே இருந்திருப்பார். இம்மாதிரிச் செய்ய நமது பார்ப்பனருக்கு சக்தி உண்டு. வகுப்புவாரி பிரதிநிதித்துவக்கொள்கை முற்றுமுற்றத்தான் ஸ்ரீமான்கள் பாவலர் குப்புசாமி முதலியார் குழந்தை வெங்கிடகிருஷ்ண பிள்ளை ஷாபி மகமது சாயபு அமீதகான் சாயபு முதலிய கனவான்கள் பெயரும் பிரபலமாகவும் அவர்களே பார்ப்பனரல்லாதார் தலைவர்களாகவும் இடம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. (தலைவர் பட்டம் ஒருவருக்கே சொல்வதமா?) அல்லாமலும் வகுப்புவாரி உரிமை சட்டத்தில் இல்லாததால்தான் எல்லாத் தலைவர்களும் ஒருநாள் வகுப்புவாரி உரிமை கேட்கவும் மறுநாளைக்கு வேண்டாம் என்கவும், ஒருநாள் காங்கிரஸ்தான் நாட்டுக்கு நல்லதென்கவும் மறுநாளைக்கு எல்லோருக்கும் உரிமை இல்லாத நாட்டில் காங்கிரஸ், கேட்டை விளைவிக்குமென்கவும் ஒருநாள் செல்வச் செருக்கும் செல்வாக்கும் பெருக்கும் நிலைக்காதென்கவும் மறுநாளைக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார்தான் யோக்கியமான தலைவர் என்கவும் ஒரு நாளைக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கையில் ஜாலரா கொடுக்கவும், மறுநாளைக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கச்சொல்லவும் நேரிடுகிறது. இப்படிப்பட்ட கனவான்களையே இன்னமும் தாராளமாய் ஆயிரக்கணக்காய் நமது பார்ப்பனர்கள் சிருஷ்டிக்கவும் அழிக்கவும் முடிகிறது. இந்த தைரியத்தால்தான் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை போன்றவர்களை அரசியல் மகாநாட்டிலிருந்து அடித்துத் துரத்திவிடலாம் என்கிற தைரியமும் அவர்களுக்கு உண்டாகிறது

1919லுக் கடைசியில் திருச்சிராப்பள்ளி தில்லைநாயகம்பிள்ளை படித்துறையில் பார்ப்பனப் பெண்கள் தண்ணீர் மொள்ளக்கூட யோக்கியதை இல்லாமல் நடுக்கமுற்றுக் கிடந்த காலத்தில் இந்தப்பார்ப்பனர்களுக்கு ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையும், வரதராஜுலு நாயுடுவும், கல்யாணசுந்தர முதலியாரும் வீரர்கள் போலவும், தென்னாட்டுத் திலகர்கள் போலவும், சாதுக்கள் போலவும் காணப்பட்டார்கள். அவர்களைத் திருச்சிக்கு கூட்டிக்கொண்டு போயும் பார்ப்பன

---

கொள்கைகளில் கலக்க வேண்டியதில்லை. சுயமரியாதையும் சுதந்திரமும் பெறுவது என்பதை லட்சியமாக வைத்துக் கொண்டாலே போதுமென்று நினைக்கிறோம். ஏனெனில் பார்ப்பனரல்லாதார் என்றால் பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் 100-க்கு 90-பேர்களாயிருக்கும் பாமர மக்களையும் ஏழை மக்களையும் குறிக்குமே அல்லாமல் 100, 5-பேர் கூட இல்லாத ராஜாக்களையும் ஜமீன்தார்களையும் பிரபுக்களையும் வக்கீல்களையும் மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்; பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் என்பதும் 100-க்கு 90-பேர்களின் முன்னேற்றத்தையும் சேர்த்துக் குறிக்குமேயல்லாது 100-க்கு 5 பேர்களின் முன்னேற்றத்தை மாத்திரம் குறிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இச்சங்கம் உண்மையான பார்ப்பனரல்லாதார் முன்னேற்றச் சங்கமா அல்லது யாரோ சில குறிப்பிட்ட நபர்களின் முன்னேற்றச் சங்கமா என்பது வெளியாக இது ஒரு தக்க சமயமாய் ஏற்பட்டு விட்டதால் ஒவ்வொரு தலைவரும் பொறுப்புடனும் புத்திசாலித்தனத்துடனும் நடந்து கொள்ள வேண்டுமென்பதாக விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

# மைசூரில் வகுப்புவாதம்.

மைசூர் அரசாங்கத்தில் பார்ப்பனரல்லாதார் விஷயம் கொஞ்சம் கவனிக்கப்பட்டு அரசாங்க உத்தியோகத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கவனிக்கப்பட்டு வருகிறது. இதை ஒழிக்க அங்கும் பல பார்ப்பனர்கள் பிரயத்தனப்பட்டு சட்ட மூலமாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை தடுக்க தீர்மானங்கள் கொண்டுவந்தவண்ணமாயிருக்கிறார்கள். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்பதற்கு அங்குள்ள பார்ப்பனர்கள் சொல்லும் காரணம் எல்லாம் திறமையைப் பார்த்து உத்தியோகம் கொடுக்க வேண்டுமே அல்லாமல் வகுப்புக் கணக்குப் பார்த்துக் கொடுக்கக்கூடாது என்கிறார்கள். அப்படியானால் உலகத்தில் பார்ப்பனர்களைத் தவிர திறமைசாலிகள் வேறு வகுப்பில் இல்லை என்பதே இவர்களுடைய அபிப்பிராயமாயிருக்கிறது. இந்த அகம்பாவம் என்றைக்கு பார்ப்பனர்களிடமிருந்து ஒழிகிறதோ அன்றுதான் இந்தியாவில் பார்ப்பனர்களும் வாழலாம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதில்லாமல் இருவரும் ஒத்து வாழ்வதென்பது முடியாத காரணம் என்றே சொல்லுவோம்.

நிற்க எந்த உத்தியோகத்தில் பார்ப்பனரல்லாதாரைவிட பார்ப்பனர்கள் திறமைசாலிகள் என்று சொல்லிக்கொள்ளமுடியும்? இதுசமயம் சென்னை மாகாணத்தில் எந்த உத்தியோகத்தில் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் திறமை வித்தியாசம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது? அல்லது ஒழுக்கத்திலாவது கண்ணியத்திலாவது பார்ப்பனரல்லாதார் எந்தவிதத்தில் பார்ப்பனர்களைவிட அதிகமாக குற்றம் சொல்லக்கூடியவர்களாயிருக்கிறார்கள்? காங்கிரஸ் என்கிற பார்ப்பனர் உத்தியோகம் சம்பாதிக்கும் இயக்கம் ஆரம்பிக்கும்முன்பு நமது நாட்டில் 100-க்கு 90 பேர் பார்ப்பனரல்லாதார்களாகவே உத்தியோகங்களில் அமர்ந்திருந்தார்கள். காங்கிரஸ் ஏற்பட்டபிறகுதான் பார்ப்பனர்கள் ஏகபோகமாய் இவ்வளவு அதிகமான உத்தியோகங்கள் உற்பத்தி செய்யவும் அடையவும் நேர்ந்தது. அதற்குமுன் திறமையைப்பற்றி பேச்சே இல்லாமலிருந்தது. ஒண்டவந்த பிடாரி ஊர் பிடாரி ஆனதுபோல் பார்ப்பனரல்லாதாருக்கு திறமை இல்லையென்று சொல்லக்கூட நமது பார்ப்பனர்களுக்கு தைரியம் வந்துவிட்டது. அல்லாமலும் பார்ப்பனர்கள் நமது நாட்டிற்கு வருமுன் இந்நாட்டின் ராஜ்ஜியபாரமே பார்ப்பனரல்லாதாரிடம் இருந்ததை நமது பார்ப்பனர்கள் நன்றாய் அறிவார்கள். அந்த ராஜாக்களிடம் இந்தப் பார்ப்பனர்கள் பிச்சை வாங்கி உண்டதற்கும் இன்னமும் ஆதாரம் வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்க இப்போது திறமையைப்பற்றி பேசும்படியான அணவம் வந்துவிட்டதானது பார்ப்பனரல்லாதாரின் பைத்தியக்காரத்தனத்தைக் காட்டுகிறது.

சர். சங்கர நாயர், சர். அப்துல் ரஹீம் போன்றவர்கள் அந்த பார்ப்பன ஜட்ஜிக்கு இளைத்தவர்கள்? ஸ்ரீமான் பி. வி. மாணிக்கம் நாயக்கர் எந்த பார்ப்பன இஞ்சினீருக்கு இளைத்தவர்? ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா எந்த பார்ப்பன கலெக்டருக்கு இளைத்தவர்கள். டாக்டர் குருசாமி முதலியார் எந்த பார்ப்பன டாக்டருக்கு இளைத்தவர்? ஸ்ரீமான் சி. ஆர் செட்டி எந்த பார்ப்பன கல்வி இலாகா அதிகாரிக்கு இளைத்தவர்? சர். மகமது அபிபுல்லாவும், சர். மகமது உசுமானும் எந்த பார்ப்பன நிர்வாக சபை மெம்பர்களுக்கு இளைத்தவர்கள். ஸ்ரீமான் எல். டி. சாமிக்கண்ணு பிள்ளை எந்த பார்ப்பன கல்வியாளருக்கு இளைத்தவர். டாக்டர் நாயர் எந்த பார்ப்பன தேசிய வாதிக்கு இளைத்தவர். இவர்களை எல்லாம் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து வேண்டுமென்றே பிரகாசமடையாமல் செய்துவிட்டு அகம்பாவத்தாலும் அயோக்கிய தனத்தாலும் திறமை திறமை என்று பேசி இன்னமும் ஏய்க்கப் பார்க்கிறார்கள். ஆகவே இத்திறமையைக் காட்டுவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பஞ்சமர்கள் என்று சொல்லப்படுவோர்கள் முதற்கொண்டு சற்று நமது பார்ப்பனர்களுக்கு அறிவுறுத்த வேண்டியது. சுயமரியாதை உள்ளவர்கள் கடமை என்றே சொல்லுவோம்.

---

ரல்லாதார் கட்சியை நிட்டச்செய்தும் வையச் செய்தும் தாங்களும் தங்களது பெண்களும் தாராளமாய் தெருவில் நடக்கும் யோக்கியதை பெற்றார்கள். இப்போது இவர்களுக்கு பதிலாய் ஸ்ரீமான்கள் பாவலர் துப்புசாமி முதலியார், குழந்தை முதலியவர்களை ஏற்பாடு செய்துகொண்டவுடன் இவர்களையே அதாவது ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையை அடிக்கவும், வரதராஜுலு நாயுடுவை ஒழிக்கவும், கல்யாணசுந்தர முதலியாரை மிரட்டவும் துணிந்து வெற்றி பெற்றும் வருகிறார்கள். அதற்கு பயந்து கொண்டு இவர்களும் நிமிடத்திற்கு ஒரு வேடம் போடவும் துணிகிறார்கள். ஆதலால் பார்ப்பனர்களுக்கு நம்முடைய தலைவர்களை ஆக்கவும் அழிக்கவும் சக்தி இல்லாமல் செய்யவேண்டுமானாலும் பார்ப்பனர் தயவும் சர்க்கார் தயவும் இருந்தால்தான் தலைவராகலாம், பதவி பெறலாம், மந்திரி ஆகலாம், உத்தியோகம் பெறலாம் என்கிற எண்ணத்தால் தேசத்தையும் சமூகத்தையும் பார்ப்பனருக்கு விட்டுக்கொடுக்காமலிருக்கவேண்டுமானாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது சட்டத்தில் ஏற்பட்டுவிடவேண்டுமே அல்லாமல் சர்க்கார் தயவினாலும், பார்ப்பனர் தயவினாலும் இருக்கக்கூடாது என்பதுதான் நமது கட்சி.

---

# ஸ்பெஷல் வண்டி

மதுரையில் நடக்கும் பார்ப்பனரல்லார் மகாநாட்டுக்கு பிரதிநிதிகளுக்கென்றே மதராசிலிருந்து ஒரு தனி ஸ்பெஷல் வண்டி 24 தேதி இரவு புறப்பட்டு 25 தேதி பகல் 10 மணிக்கு மதுரை வந்து சேரும்.

ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## விவேகானந்தர் சங்கம், கோட்டாறு.

நாளது ஹு மார்கழி மீ 4 தேதி மாலை 5 மணிக்கு இந்நகர் ரதோற்சவம் மேற்படி சங்கத்தின் ஆதரவில் திருவாளர் பி. முத்துக்கருப்ப பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் அக்கரை சத்திரத்தின் அருகாமையில்கூடிய விசேஷ கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன.

சென்ற சில தினங்களுக்குமுன் சென்னை கோகலே ஹாலில் நடைபெற்ற தமிழ் மாகாண மகாநாட்டிற்கு காங்கிரசுக்காக பெரும்பாடுபட்டு தியாகம் செய்தவரும், நாளதுவரை காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராய் இருப்பவரும், தமிழ் நாட்டு பெருந் தலைவரில் ஒருவருமான திருவாளர் என். தண்டபாணி பிள்ளை அவர்கள் முறைப்படி ரூபாய் கொடுத்து பிரதிநிதி சீட்டுப்பெற்று மகாநாட்டுக்கு சென்றிருந்தும் அன்னாரை நமது நாட்டவரென்றும் பாராமல் காங்கிரஸ் அங்கத்தினர் என்பதையும் மறந்து முறைகேடாக, அநாகரீகமாகவும், வெறுக்கத்தக்க விதத்தில் பிள்ளை அவர்களை வெளியேற்ற முயற்சித்த பார்ப்பன சுயராஜ்ய தலைவர்களையும் அவர்களுக்கு உதவியாயிருந்த கோடாலி காம்புகளையும் இக்கூட்டம் அழுத்தமாய் கண்டிக்கிறது.

சென்னை, திருவல்லிக்கேணியில் கடற்கரையில் கூடிய கூட்டத்திலிருந்த திருவாளர் பக்கிரிசாமி பிள்ளை அவர்களை தனது மனசாட்சிக்கு விரோதமாக ஸ்ரீனிவாசய்யங்காருக்கு ஜே' என்று சொல்லும்படி வற்புறுத்தியதை அன்னார் மறுத்து பனகல் ராஜாவுக்கு ஜே! என்ற ஒரு காரணம்பற்றி ஷை பிள்ளை அவர்களை ஓர் கண் கலங்க அடித்ததாக பத்திரிகைகளில் வெளிவந்த விபரத்தைக் கண்டு இக்கூட்டத்தார்கள் அனுதாபப்படுவதுடன் இவ்வொழுங்கீனமான செய்கைக்கு உடந்தையாயிருந்தவர்களை பலமாகக் கண்டிக்கிறது என்கிற தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிற்று.

சமீபத்தில் மதுரைமாநகரில் கூடும் பார்ப்பனரல்லாதார் பத்தாவது மகாநாட்டிற்கு டெலிகேட்டாக அனுப்புவதற்கு பதினைந்து நண்பர்களை தெரிந்தெடுத்தும் சபை கரகோஷத்துடன் கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிறார்.

## விருதுநகர் ராவ்பகதூர த. இரத்தினசாமி நாடார் ஞாபகச் சின்ன வாசகசாலை.

### ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா.

(ஒரு நண்பர் எழுதுகிறார்.)

மேற்படி வாசகசாலையின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா நாளது மார்கழி-மீ 1உ (16—12—26) வியாழக்கிழமை காரைக்குடி "குமரன்" ஆசிரியர் ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் கொண்டாடப்பெறுமென்றும் அறிஞர் பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்களென்றும் எல்லாரும் வந்திருந்து சிறப்பிக்க வேணுமாய் விண்ணப்ப பத்திரம் ஒன்று ஒரு வாரத்துக்குமுன் வெளியிடப் பெற்றதோடு வழக்கம்போல் நிகழ்ச்சிக் குறிப்புகள் சேர்ந்த அழைப்புப் பத்திரமும் அச்சிட்டு வியாபார நிமித்தம் பம்பாய், கல்கத்தா, சென்னை, காரைக்கு, கான்பூர், கொழும்பு, ரங்கூன், கொல்லம், ஆலப்புழை, இலைக்கோடு, திருவனந்தபுரம், திருவாரூர், கும்பகோணம், சிதம்பரம், போடிநாயக்கனூர், தேவாரம், கம்பம், கோம்பை, திண்டுக்கல், இராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி முதலிய ஊர்களில் வசிக்கும் நாடார்குல அன்பர்களுக்கும் சர்மசிமூகத்தல பல்வேறு இடங்களில் வசிக்கும் ஜாதிய, தேசிய அன்பர்களுக்கும் தபால் மூலம் அனுப்பப் பெற்றதுடன் உள்ளூரிலும் கட்சி பேதம், மதபேதம், ஜாதி பேதமின்றி முக்கிய அன்பர்களுக்கும் தனித்தனியாகத் தாள் கூட்டில் அனுப்பப்பெற்றது.

தலைவர்களை மதுரை சென்று எதிர்கொண்டழைத்து வியாழக்கிழமை பகல் வரிகண்டியால் விருதுநகர் புகைவண்டி நிலையத்தில் உதவி ஆசிரியர் ஸ்ரீமான் க. சு. கிருஷ்ணன் அவர்களுடனும் சகாக்களுடனும் வந்திறங்கினர். காரியதரிசியால் பூமாலை சூட்டப் பெற்று காலு சக்கர குதிரை வண்டியிலமர்த்தி ஸ்ரீமத் அறுபத்தி மூன்று நாயன்மார்கள் திருமடாலயத்துக்கு அழைத்துவரப் பெற்றனர். சொற்பொழிவு நிகழ்த்த ஒப்புக்கொண்ட அறிஞர்களும் உரிய காலத்தில் வந்து சேர்ந்தனர்.

வாசகசாலையின் முன் அமைத்துள்ள சிங்காரப் பந்தலில் மாலை முப்பது நாழிகைக்கு விழா ஆரம்பமாயிற்று. விவசாயிகளும், வியாபாரிகளும், தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும், உபாத்தியாயர்களும், மாணவர்களும், ஏராளமாக நிறைந்திருந்தனர்.

பஜனைத் தலைவர் நண்பர் கிருஷ்ணநாடார் அவர்கள் இன் இசையுடனும் இனிய குரலுடனும் கடவுள் வணக்கப் பாக்கள் பாடி தெய்வ அன்பு உக்கச் செய்தனர். நண்பர்கள் க. பெ. சங்கரலிங்கம், அ. ச. க. குருசாமி இவர்களால் முறையே பிரேரேபித்து ஆமோதிக்கப்பெற ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் சபா நாயகராக சொற்பொழிவு நிகழ்த்தி ஆசனத்தமர்ந்தனர். காரியதரிசி நண்பர் கி. பெ. ம. ப. பிரகாசம் அவர்களால் வாசக சாலையின் அறிக்கை பத்திரம் படித்தபின் சபா நாயகர் அவர்கள் எழுந்து சிறந்த முகவுரை தந்து ஆசனத்திலமர்ந்தனர்.

நாமக்கல் ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றிய அழகிய இன்ப மிகுந்த இராட்டுப் பாட்டினை நண்பர் கிருஷ்ண நாடார் அவர்கள் பஜனை அன்பர்கள் இசையுடனும் இனிய தாளுடனும் இன்பமுடனும் பாட, உலக உத்தமர் குணமலை, கருணைக் கடல் காணும் தெய்வமாய் காந்தியடிகளாரிடம் உகைத்துக்கு சமாதானத்தையும் மேக்ஷமத்தையும் நல்கவல்ல சக்கரமாம். கைராட்டினத்தில் சிறந்த நூல் நூற்றதற்காக தங்கப் பதக்கம் பரிசு பெற்ற திருப்புவனம் ஸ்ரீமான் வெ. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களால் இராட்டில் நூல் நூற்றல் காட்சி கொடுக்கப் பெற்றது. அன்னவர் நூற்ற நூலினைக் கண்டும் அன்னவர் நூற்ற உயர்தர நூலினைக்கொண்டு அருமையுடன் நெய்த ஆடைகளைக் கண்டும் சபையினர் ஆனந்தம் கொண்டனர்.

அதன்பின் மதுரை வக்கீல் ஸ்ரீமான் எ. பொன்னையா நாடார் பி. எ. அவர்கள் "நாடார்களும் தேச சேவை" என்பதைப் பற்றியும் ஸ்ரீமான் [illegible] யாபிள்ளை அவர்கள் "வாசகசாலையின் பயன்" என்பது பற்றியும் திருவாசகம் சிறந்த அவதாரியார் ஸ்ரீமான் [illegible] மணியதாஸ் அவர்கள் "திருவள்ளுவரும் காந்தியடிகளும்" என்பது பற்றியும் காரைக்குடி "குமரன்" உதவி ஆசிரியர் ஸ்ரீமான் க. சு. கிருஷ்ணன் அவர்கள் "மகாத்மா காந்தி போதிப்பது என்ன" என்பது பற்றியும் ஸ்ரீமான் அ. கி. காசலிங்க சுவாமிகள் "நாமும் பெண்மக்களும் மேன்மையுணர்வும்" என்பது பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

இவ்வூர் க்ஷத்திரிய வித்தியாசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீமான் பி. சுந்தரராஜ அய்யங்கார் பி. எ. எல் டி. அவர்கள் தன்முயற்சியால் பயிற்றுவிக்கப் பெற்ற அவ்வித்தியாசாலை மாணவர்களைக் கொண்டு இக்காலத்தில் பொய் வேஷதாரிகளின் மாயவலையில் சிக்குண்டு மோசம் போகா வண்ணம் அறிவை வளர்த்து செய்ய ஆற்றல் படைத்த நவீன நாடகம் ஒன்று சமயோசிதமாக வண்ணம் நடத்திக் காட்டப்பெற்றது.

அதன்பின் சபா நாயகர் அவர்கள் எழுந்து அறிஞர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் பொதிந்துள்ள இன்பங்களை எடுத்துரைத்து, முடிவுரையாக தாய்மொழியாகிய தமிழ்மொழி, தமிழ்ச் சங்க நூற்கள், இயற்கை இன்பம் இவைகள் பற்றியும் தற்கால அரசியல் பற்றியும் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களாகிய கதர் தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, கல்வி, உத்தியோகம்" இவைகளைப் பற்றியும் சிறந்த மேற்கோள்களுடனும் உதாரணங்களுடனும் இன்பம் ததும்பிய அன்பு மயமான சொற்பொழிவு நிகழ்த்தி ஆசனத்திலமர்ந்தார்கள்.

கடைசியாக சபா நாயகர் அவர்களுக்கும் சொற்பெருக்குகள் நிகழ்த்திய பெரியார்களுக்கும் மற்றுமுள்ள அன்பர்களுக்கும் பூமாலை சூட்டி வந்தனவுபசாரம் சொல்லப் பெற்று இரவு சுமார் பதினொரு நாழிகைக்கு நிறைவு விழா மங்களமாக முடிவெய்தியது.

## சுவாமிசித்தாநந்தரின் மணிவாசகம்.

தேசத்தின் ஒற்றுமைக்கு தடைகல்லாய் இருப்பவர்கள் தங்களுக்குமட்டும் தான் தேசாபிமானம் உண்டென்று சொல்லிக்கொள்ளும் சென்னை சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர்கள். மந்திரி பதவி ஏற்பதானது நிபந்தனையில்லாமல் ஒத்துழைப்பதாகும். சுயராஜ்யக் கட்சியார் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும் சென்னை பார்ப்பனர்கள் தேர்தலுக்குப் பின்னுங்கூட திட்டுதல் பித்தலாட்டம் புனைசுருட்டுப் பேசுதல் முதலிய தங்களது ஜாதிப் புத்தியை விடாமலிருக்கிறார்கள். சென்னை சுயராஜ்யக் கட்சியார் தங்களுடைய யோக்கியதைகளை யாவது வெளியிடாமல் மற்றவர்களை வகுப்புவாதிகள் என்று பழி சுமத்திப் பிரசாரம் செய்து வருகிறார்கள். லாலாஜி பார்ப்பன அக்கிரமக்காரர்களைவிட எவ்வளவோ கண்ணியமானவர். சென்னை சட்ட சபையில் வெள்ளைக்காரர்கள் அதிக ஸ்தானம் பெற்றிருப்பதற்கு கண்டிக்கும் சென்னை பார்ப்பனர்கள் இந்தியா சட்டசபைக்கு 10-ல் 8 ஸ்தானங்களை சென்னைப் பார்ப்பனர்களை கைப்பற்றி இருப்பது மாத்திரம் சகிக்கக் கூடியதா? இம்மாதிரி அளவுக்கு மீறின ஆதிக்கம் பெற்றிருக்கும் சென்னைப் பார்ப்பனர்களுக்கு மற்றவர்களை வகுப்பு வாதிகள் என்று சொல்ல யோக்கியதை ஏது? பார்ப்பன ஆதிக்கத்திற்கு இரையாக [illegible] சட்டசபை ஆசிரியர்களும் ராமசாமி நாயக்கர் வரதராஜுலு நாயுடு போன்ற பெரிய பெரிய தியாகிகளையும் தேசபிமானிகளையும் தூற்ற ஆரம்பித்துவிட்ட சென்னைப் பார்ப்பனர்கள் இப்போது லாலாஜியையும் தூற்றுவதற்கு தைரியம் கொண்டுவிட்டார்கள். ஸ்ரீமான் எஸ். கே. ஆச்சாரியார் போன்ற பார்ப்பனர்கள் பொய்யும் புளுகும் [illegible] செய்து [illegible] முதலிய [illegible] குணங்கள் ஒழிக்கப்பட்டாலொழிய தேசம் முன்னுக்கு வர முடியாது.

## கோவைகர்பாளையம் ஸ்ரீமான் கே. எஸ். நஞ்சப்ப கவுண்டர் அவர்களால் நடத்திவிக்கப்பட்ட [illegible]

[illegible] கோவைகர்பாளையத்தில் அக்ஷய-ஞூ மார்கழி-மீ 5உ (20-12-26) ஞாயிற்றுக்கிழமை [illegible] மணிக்கு ஸ்ரீ [illegible] பெருமாள் [illegible] திரு [illegible] நாதசுரம், பக்கல்லூர் திரு இரத்தினம் தவுல். மாலை [illegible] மணிக்கு வாய்ப்பாட்டு திரு எம். ஆர். [illegible], பிடில் திரு. கே. எஸ். [illegible], ஹார்மோனியம் திரு. பி. எஸ். சுப்பிரமணிய தீக்ஷதர், மிருதங்கம் திரு. வி. எ. [illegible] ஆகிய வித்வான்களைக் கொண்டு சங்கீதக் கச்சேரியும் பிராமண போஜனமும் நடைபெற்றது.

## கோவை ஜில்லா செனட் & அபிலியேடட் காலேஜ் அங்கத்தினர் எலெக்ஷன்.

அபிலியேடட் காலேஜ் அங்கத்தினர் ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் கிருஷ்ணசாமி செட்டியாருக்கு 101 ஓட்டுகள் கிடைத்து தெரிந்தெடுக்கப்பட்டார். செனட்டுக்கு ஸ்ரீமான் திருப்பூர் சேர்மென் என். துரைசாமிக் கவுண்டர் 68 ஓட்டு பெற்று தெரிந்தெடுக்கப்பட்டார்.

டனுடன் அவர்கள் இன்னமும் தாங்கள் செய்த குற்றங்கள் இன்னவையென்று தெரியாமலிருக்கிறார்கள். இந்நிலைமையில் தேசத்தாரும் சட்டசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களும் தெரிவித்துள்ள தெளிவான அபிப்பிராயத்துக்கு மாறாக அவர்கள் இன்னமும் சிறையில்வைக்கப்பட்டிருப்பதையும், வங்காளத்திலிருந்து நாடு கடத்தப்பட்டிருப்பதையும் இந்த மகா சபை பலமாகக் கண்டிக்கிறது.

### 9 ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

ஹிந்து முஸ்லீம்களுக்குள் தற்போது நிகழ்ந்துவரும் வருந்தத்தக்க பூசல்களை ஒழிப்பதற்கு இந்து முஸ்லீம் தலைவர்களைக் கலந்துகொண்டு தகுந்த முறைகளைக் கண்டுபிடிக்க உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டு 1927ம் வருஷம் மார்ச்சு மாதம் 31 தேதிக்குள் அறிக்கை அனுப்புமாறு காரிய கமிட்டிக்கு இந்தக் காங்கிரஸ் கட்டளையிடுகிறது. இது சம்பந்தமாக தேசத்திலுள்ள எல்லா காங்கிரஸ்காரர்களும் யோசனை சொல்லவும், மேற்படி காரியக்கமிட்டி அறிக்கையை ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கும் அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கிறது

[ஏனைய தீர்மானங்கள் அடுத்த வாரம் வெளிவரும்]

ஆகிய பதின்மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதில் முக்கியமாய் கவனிக்க வேண்டியது 4-வது தீர்மானமாகிய சட்டசபைத் திட்டம் என்னும் தீர்மானமேயாகும். இது எவ்வளவு தூரம் பாமர மக்களை ஏமாற்றச்செய்த தீர்மானம் என்று அறிய வேண்டுமானால், இத் தீர்மானத்தை விஷயாலோசனைக் கூட்டத்தில் பிரேரேபிக்க ஆரம்பித்தவுடன் மகாத்மா அக்கூட்டத்தைவிட்டு வெளியேறினதிலிருந்தே அறிந்துகொள்ளலாம். அதாவது அத்தீர்மானத்தில் சட்டசபையிலுள்ள காங்கிரஸ்காரர்கள் நடந்துகொள்ளவேண்டியதைப்பற்றி குறித்திருப்பதில் "அரசாங்கத்தார் திருப்திகாமான பதிலளித்ததாக காங்கிரஸ் கமிட்டியாருக்கு தோன்றும்வரை மந்திரி பதவிகளையும் அரசாங்கத்தினால் கொடுத்து பெறத்தகுந்த உத்தியோகங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மற்றக் கட்சியினரால் மந்திரி சபை அமைக்கப்படுவதையும் எதிர்க்கவேண்டும்." என்பதாகும் இதன் உட்பொருள் என்ன? தாங்களே மந்திரி சபையை அமைத்து நடத்தத்தக்க போக்கியதை கிடைக்கும்வரை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதுதான். இப்போது சென்னை மாகாணத்தில் மாத்திரம் மற்ற கட்சியாரைவிட அதிகமான பேர் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தாலும் மற்ற மாகாணங்களில் போதிய மெஜாரிட்டி இல்லையாதலால் ஒரு மாகாணம் மாத்திரம் ஒப்புக்கொண்டால் மற்ற மாகாணத்தாரின் நிஷ்டூரம் ஏற்படும். ஏனெனில் பங்காள மாகாணத்தாருக்கு சென்ற தேர்தலில் போதிய மெஜாரிட்டி இருந்தும் சென்னை மாகாணத்தாருக்காக அவர்கள் மந்திரி உத்தியோகத்தை மறுத்துவிட்டது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். அதற்கு பதிலாக மற்ற மாகாணத்தாருக்காக இவர்கள் மறுக்கவேண்டியதாயிற்று. அல்லாமலும் சென்னை மாகாணத்தில் சுயராஜ்யக் கட்சியார் மந்திரி சபை அமைப்பது சுலபமான காரியமல்ல. முதலாவது மந்திரி உத்தியோகத்திற்கு அக்கட்சியில் தலைவரால் வாக்களிக்கப்பட்டபடி குறைந்தது 8, 10 பேருக்கு கொடுத்தாகவேண்டும்.

ஸ்ரீமான்கள் 1 நரசிம்மராஜு, 2 சாமி வெங்கிடாசல செட்டியார், 3 டி. ஆதிநாராயண செட்டியார், 4 எஸ். முத்தய்யா முதலியார், 5 கே. ஆர். வெங்கிட்டராமய்யர், 6 எல்.கே. துளசிராம், 7 சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார், 8 எஸ். சத்தியமூர்த்தி இது தவிர ஜனுப்கள் மூன்று பேருக்கும் வேறு எதாவது வழி செய்தாகவேண்டும். இது தவிர வேறு பலருக்கும் வேறு பல உத்தியோகங்கள் வழங்கியாகவேண்டும். ஆகவே இந்தப் பத்துப் பதினைந்து பேர்களில் மூன்று மந்திரி உத்தியோகம் பெற்றவர்களும், தலைவர் உத்தியோகம், உபதலைவர் உத்தியோகம் பெற்றவர்களும் போக மற்ற 12 பேர்கள் உடனே பெரும்பாகம் நேரே ஜஸ்டிஸ் கட்சியிலும் சிலர் சுயேச்சை கட்சியிலும் சேர்ந்துவிடுவார்கள். தவிரவும் சட்ட சபை மொத்தம் 128 மெம்பர்களில் சுயராஜ்யக் கட்சியார் பெற்றதெல்லாம் அவர்கள் சொல்லுகிறபடி வைத்துக்கொண்டாலும் 45 பேர்கள்தான், மீதி 83 பேர்கள் எதிர்கட்சியில் உட்கார்ந்தால் இவர்கள் கதி என்னவாகும் என்பது அவர்களுக்குத் தெரியும் ஒரு சமயம் சர்க்கார் உதவி கிடைப்பதாக வைத்துக் கொண்டால் சர்க்கார் சொல்லுகிறபடி இவர்கள் கேட்டாகவேண்டும். சுயேச்சைக் கட்சியார் தயவு பெறலாமென்றாலோ அவர்களுக்கு ஒரு மந்திரி ஸ்தானமாவது கொடுத்தாகவேண்டும். அப்பொழுது சுயராஜ்யக் கட்சியில் இருந்து இன்னும் சிலபேரும் சுயேச்சைக் கட்சியிலிருந்து இன்னும் சில பேரும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிடுவார்கள். ஆகவே இந்த காரியங்கள் தான் சுயராஜ்யக் கட்சியார் மந்திரி பதவி அடைவதற்கு இடையூறாக இருந்தது. கவர்னர் கூப்பிட்டு அமைக்கச்சொன்னாலோ என்றால் சர்க்கார் இம்மந்திரி சபையை யார் தலையிலாவது போட்டுத்தானாகவேண்டும். குறைந்த துணையினரான சுயேச்சைக் கட்சியாரைக் கூப்பிட்டு இருக்கும்போது அதிகத் துணையார் என்று சொல்லிக்கொள்பவர்களை கூப்பிடுவதில் ஆட்சேபனை என்ன இருக்கிறது? ஆதலால் தங்களுக்கு மந்திரி பதவி வகித்து யாருடைய தயவு தாக்ஷண்ணியமும் இல்லாமல் அனுபவிக்கக் கூடிய காலம் வரும் வரை "சர்க்கார் இணங்கி வரவில்லை" என்று சொல்லிக்கொண்டு காலம் தாட்டுவதற்கு ஆகவே இத்தீர்மானம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தவிரவும் சுயேச்சைக் கட்சி மந்திரியை சபை அமைத்தது பேருக்கு மாத்திரம் ஸ்ரீமான் சுப்பராயனே ஒழிய உண்மையில் சுயராஜ்யக் கட்சி பார்ப்பனரும், "ஒத்துழைப்புபார்ப்பனரும்" "ஒத்துழையாபார்ப்பனரும்" சேர்ந்துதான் அமைத்திருக்கிறார்கள். உண்மையில் சுயராஜ்யக் கட்சியார் திருட்டுத்தனமாய் ஒத்துழைப்பதாக வாக்களித்திரா விட்டால் ஸ்ரீமான் சுப்பராயன் அவர்கள் மந்திரி சபை அமைக்க தைரியம் கொண்டிருப்பாரா என்பதை வாசகர்களே யோசித்து பார்க்க வேண்டும். ஆதலால் காங்கிரஸ் கமிட்டிக்கு சர்க்கார் திருப்தியளிக்கும்படி நடந்து கொள்வது என்பது "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருப்பது தான்." தவிர மேற்படி தீர்மானத்தின் 2-ம் பாகமாகிய, சிலவினங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு நிராகரிப்பது என்பதும் மூன்றும் பாகமாகிய அரசாங்கத்தார் கொண்டுவரும் மசோதாக்களை எதிர்ப்பது என்பதும் தாங்கள் சவுகரியம் போல் நடந்து கொள்ளுவதற்கு ஏற்படுத்திக்கொண்ட தந்திர மார்க்கமே ஆகும். நான்காம் பாகமாகிய சில மசோதாக்கள் கொண்டுவர இடம் வைத்துக்கொண்டிருப்பது எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் தங்களுக்கு ஒரு நிலை இல்லாததும் முன்னுக்கு பின் முரணானதும் சமயம் போல் நடந்துகொள்ள உரிமை பெற்றுக் கொண்டதுமாகும். மற்ற பாகத் தீர்மானங்களும் பலதிறப்பட்ட பிறரை ஏமாற்றுவதற்கு உதவியதே அல்லாமல் காரியத்தில் நடத்தக் கூடியதல்ல. தவிர 11-வது தீர்மானமாகிய கதர் தீர்மானம் மாத்திரம் நாம் சிறிது சந்தோஷப்படக் கூடியதாயிருக்கிறது. அதுவும் மதுரை பார்ப்பனரல்லாதார் மகா நாட்டில் கதர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக இங்கிருந்து கோஹத்திற்கு தந்தி போனவுடன் அங்குள்ள பார்ப்பனர்கள் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் திடீரென்று தாங்களும் தீர்மானிக்க வேண்டியதாயிற்று: ஆனாலும் எத்தனை பேர்கள் காங்கிரஸ் மெம்பர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் கட்டப்போகிறார்கள் என்பதை பொது ஜனங்கள் பார்க்காமல் இருக்கப் போவதில்லை. எப்படி ஆனாலும் இத்தீர்மானம்காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அளவுக்காவது நாம் சந்தோஷப்பட்டுத்தான் ஆக வேண்டும் மற்றபடி 6-வது தீர்மானமாகிய நிர்மாண வேலை என்னும் தீர்மானமானது. மொட்டையாகவும் குழப்பப்பட்டு ஏமாறும்படியாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது

காங்கிரஸ் நிர்மாண திட்டத்தை அங்கீகரிக்கிறது என்றும் நிர்மாண திட்டத்தின் மூலம் ஜனங்களை பயிற்றுவது என்றும் எழுதப்பட்டிருக்கிறது. யார் நடத்தி வைப்பதென்றாவது அதன் அவசியத்தை ஒப்புக்கொள்வதாகவாவது குறிப்பிடவேயில்லை. ஆனால் அக்கிராசனர் உபன்னியாசத்தில் கதர்ப் பிரசாரத்தை காங்கிரசிலிருந்து தனி இயக்க மூலம் பிரித்துக் கொண்டது போல் தீண்டாமையையும் காங்கிரசிலிருந்து பிரித்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறதைப் பார்க்கும்போதே இவர்கள் நோக்கம் சட்ட சபையும் மந்திரி பதவியுந்தான் என்பது நன்றாய் விளங்கிவிடும். ஆகவே காங்கிரசின் உண்மையான வேஷம் இன்னது என்பது இந்த தடவை நன்றாய் வெளியாய் விட்டது. இனியும் ஏதோ சில வாழ்வுக்கு வேறு நிவர்த்தி இல்லாத ஆசாமிகளையும் வக்கீல்களையும் பார்ப்பனர்களையும் தவிர மற்றவர்கள் இப்போதைய காங்கிரசில் நுழைய மாட்டார்கள் என்பது மாத்திரம் உறுதி. இனி எவ்வித சூழ்ச்சியிலும் மக்கள் ஏமாறமாட்டார்கள் என்பதும் உறுதி.

## மதுரை மகாநாடு.

### ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியாரின் அபிப்பிராயம்.

#### அரசியலின் தடைநீங்க மார்க்கம்.

காங்கிரஸ் வாதிகளாகிய நாங்கள் மதுரை மகாநாட்டில் அரசியல் வளர்ச்சி சம்பந்தமாக நடைபெற்றதைப்பற்றி என்ன அபிப்பிராயம்கொண்டபோதிலும், மகாநாட்டில் மத சீர்திருத்த சம்பந்தமாக நிறைவேறின தீர்மானத்தைப்பற்றியும் அங்கு நம் நாட்டார் சடங்குசீர்திருத்த விஷயமாக எடுத்துக் கொண்ட ஊக்கத்தைப்பற்றியும் புகழ்ந்தேற்றுக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. இத்தீர்மானப்படி ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுக்குள்ளேயே புரோகிதர்களையும், சடங்குக் காரர்களையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிகிறது. இது நமது சமய சரித்திரத்தில் ஓர் விசேஷ சம்பவமே. நெடுநாளாக புராணங்கள் இந்தியாவில் பரவின நாட்கள்தொட்டு மதக்கிரிகைகளும் சடங்குகளும் செய்ய பிரத்தியேகமான ஓர் கூட்டத்தார் லாயக்குள்ளவர்களென்றும் அன்றுதொட்டு அக்கூட்டத்தாரே புரோகிதர்களாகவுமிருந்து வருகிறார்கள். அவர்களைத்தான் நாம் பிராமணர்களென்று சொல்லுகிறோம். இவர்கள் மதசம்பந்தமான வைதிக, லௌகிகமான அல்லாக்கிரியைகளுக்கும் புரோகிதர்களாயிருக்கின்ற ஆதிக்கத்தை கைபாடிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற சமூகத்தார்களும் நாளது வரையிலும அவர்களிடமிருந்து இந்த உரிமையைக் கைப்பற்ற முயற்சித்ததுமில்லை. இல்லையென்று ஒரே பிடிவாதமாய் சொல்ல முடியாது. பிரம்மசமாஜத்தவர்களும், நம நாட்டு விசுவகர்மர்களும் இது விஷயமாய் [illegible] கிளர்ச்சி செய்தார்கள். ஆனால் அக்கிளர்ச்சிகள் நம் நாடு முழுவதும் பரந்த இயக்கமாயிருக்கவில்லை. மதுரையில் நடந்த மகாநாடே முதன்மையாக இந்த இயக்கத்தை நாடு முழுதும் முதல் இயக்கமாகச் செய்தது. பௌத்தர் காலத்தில் வைதிகம் அறவே தொலையவும், அக்கினிஹோத்திரிகள் என்பவர்களுடைய புரோகிதத் தன்மை பாழ்படவும் நேரிட்டது. அவர்கள் அதையுணர்ந்து சமயம்போல் நடந்துகொண்டார்கள். மேல் நாட்டில் இத்தகைய வைதிக புரோகித மதத்தையும் கொடுமையையும் நீக்க பெரும் கிளர்ச்சிகள் நடந்தன. மார்ட்டின் லூதர் என்பவர் பெரும் கிளர்ச்சிசெய்து வலிவோடு வேலை செய்ததின் காரணமன்றோ இன்று ஐரோப்பாவில் புரோகித மதக்கொடுமை ஒழிந்திருக்கக் காண்கின்றோம்.

மதக்கொடுமை ஒழியவேதான் ஐரோப்பியர்கள் இன்று எவ்வகையிலும் சுதந்திரர்களாயிருக்கிறார்கள். மதுரை மகாநாட்டில் புரோகித மதத்தையும் சடங்கு மதத்தையும் ஒழிக்க கொண்டுவந்த தீர்மானத்தை கொண்டு முதன் முதல் இதுவே நம் நாட்டில் வந்த இயக்கமென்று சுதந்தரதாகமுடைய நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இன்றுதொட்டு நம் மக்கட்கிடையிலிருக்கும் மோட்ச சம்பந்தமான மூட எண்ணங்கள் தொலைந்தன. அவைகளுக்குச் சாவுமணியும் அடிக்கப்பட்டது. இனிமேல் நம்மவர்கள் புருஷார்த்தத்திற்கோ, புண்ணியத்திற்கோ, மோட்சத்திற்கோ புரோகிதர்களை எதிர் பார்க்கவேண்டியதில்லை. இத்துறையிலுள்ள இந்த இயக்கம் நம் மக்கள் பூர்ண சுதந்தரமடைய மற்றெல்லாத் துறைகளிலும் மிகுந்த [illegible] போதுமான ஊக்கந்தருமென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

நெடுங்காலமாய் எதிர்பார்க்கப்பட்ட இந்த சீர்திருத்தத்தை அறிவுள்ள எந்த மனிதனும் எதிர்க்கமாட்டான். நம் நன்மைக்காக கடவுளை வணங்குவதும் நம் நாட்டை நாமே ஆள்வது நமது பிறப்புரிமை. ஆகவே உண்மை சுதந்திரவாதிகளாகிய எல்லோரும் இத்தகைய சீர்திருத்தங்களை ஆதரித்து அவற்றை பரவச்செய்து பழக்க வழக்கத்தினால் நமது பிறப்புரிமைக்குத் தடையாய் இருக்கும் எல்லாவற்றையும் அடியோடு புதைக்க பாடுபடுவது அவர்களின் உயர்கடமையாகும். இத்தகைய சீர்திருத்த இயக்கங்களை எல்லா அரசியல்வாதிகளும் அவசியம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இது சுயமரியாதையையும் பிறப்புரிமையையும் காப்பாற்றும் சுதந்திரத்திற்கு முதல்படி. இதனால் வைதீகக்கொடுமையும் புரோகிதக் கொடுமையும் நம் நாட்டிலிருந்து ஒழிந்து போகும் இந்த சீர்திருத்தம் சரியானமுறையில் அனுஷ்டிக்கப்படுமானால் நம் நாட்டில் உள்ள எல்லாவகுப்பினர்களுக்கும் சமத்துவம் உடனே நேருவதுமன்னியில் நமது அரசியலை பாழ்படுத்தும் வகுப்புத்திமிரும் தொலைந்துபோம். ருஷியப் பேரறிஞர் சிக்கோப் என்பவரின் நோக்கத்திற்கிசைந்து சொல்வதானால் "நீங்கள் இதை ஆதரிக்க மனங்கொண்டாலும் சரி இல்லாவிடினும் சரி அதற்குரிய காலம் வந்துவிட்டது. ஆகவே நடந்துதான் தீரவேண்டும்" என்று சொல்ல நேருகிறது வகுப்புத் திமிரும் வைதிகக் கொடுமையும் அழிந்துபோகும் காலம் இதுதான். சுயமரியாதையும் சுதந்திரமும் இனிமேல் தடைபடாது ஓங்கிவளரும்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

ருப்பது பிணத்திற் கொப்பாகும். ஆகவே நீங்கள் சுறுசுறுப்பின்றி மாக் கட்டைபோல் இருக்க எண்ணம் கொள்கிறீர்களா? (இல்லை! இல்லை! என்கிற சப்தம்) இல்லையெனில் இந்தப் போராட்டத்தில் ஊக்கம் கொண்டு முன் நின்று பொருதுங்கள். உங்கள் உரிமைக்காகவும் உங்கள் சமூகத்திற்காகவும் கடுமையாய்ப் போராடுங்கள். ஜயலக்ஷ்மி உங்கள் சார்பில் நிற்பாள். எந்த நாளில் இந்தியாவில் ஜாதி வித்தியாசம் கொண்டுவரப்பட்டதோ எந்த நாளில் கற்பனையால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டதோ எந்த நாளில் இந்து சமுதாயத்தின் ஓர் சமூகத்தாருக்கு கோயிற் பிரவேசம் மறுக்கப்பட்டதோ எந்த நாளில் பார்ப்பனர்கள் உங்களை அடிமைப்படுத்தி பணியச் செய்தனர்களோ அந்நாளிலேயே இந்தியா வீழ்ந்து விட்டது. வீழ்ந்து விட்டது. (ஆமாம்) வீழ்த்தப்பட்ட என நாட்டுச் சகோதரர்களே! நீங்கள் புத்துயிர் கொண்டெழ மாட்டீர்களா? (எழுவோம் எழுவோம் என்கிற சப்தம்.) இந்த தீர்மானத்தைவிட மேலான உதவி செய்யக் கூடியது வேறு என்னயிருக்கிறது?

சென்ற தேர்தல்களில் நமது தோல்விக்குக் காரணம் மதக் கொடுமையேயன்றி வேறொன்றுமல்ல என்று நீங்கள் கண்டிப்பாய் தெரியுங்கள் (ஆம்! ஆம்! என்கிற சப்தம்) இத்தகைய மதத் தாழ்மையும் சமுதாயத்தில் ஒரே குறிப்பிட்ட வகுப்பாரின் ஆதிக்கமும் நம்மை அரசியல் துறையில் எழ முடியாத பெரும் படுகுழிக்குள்ளாக்கி விட்டது. உயர்வு தாழ்வு என்கிற எண்ணங்கள் கதிரவனைக் கண்ட பனிபோல் விலகிவிடட்டும்; பார்ப்பனரல்லாத இந்த நம்முடைய இயக்கம் இக்கொடுமை புரோகித மதக் கட்டுப்பாட்டை உடைத்தெறியட்டும். இனிமேற்கொண்டு நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் வீட்டில் நடக்கும் எந்தச்சடங்கிற்கும் பிராமணர்களை அழைக்க மாட்டோமென்ற விரதம் பூண்டு அதன்படி நடக்க வேண்டுமென்ற பெரும் வேண்டுகோளுடன் எனதுரையை முடிக்கிறேன். (அழைக்க மாட்டோம் அழைக்க மாட்டோம் என்கிற சப்தத்தோடு பெருத்த நீண்ட கரகோஷம்.)

## விருதுநகர்

விருதுநகரில் சட்ட சபை உறுப்பினர்க்கு உபசரிப்பு 27-12-26ல் மாலை விருதுபட்டி காஸ்மா பாலிட்டன் கிளப் அங்கத்தினர்கள் மதுரை ஜில்லாவில் சட்ட சபையில் ஸ்தானம் பெற்ற ஸ்ரீமான்கள் பட்டிவீரன் பட்டி சௌந்தர பாண்டிய நாடாருக்கும், பி. டி. ராஜனுக்கும் சென்னை ஸ்ரீமான் ஏ. இராமசாமி முதலியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர்கள். அவ்விருந்துக்கு ஸ்ரீமான்கள் பனகால் ராஜா ஈ. வி. ராமசாமி நாயக்கர் திருநெல்வேலி குமாரசாமி செட்டியார், சிதம்பரநாதமுதலியார் மதுரை அலாவுதீன் ராவுத்தர், இஞ்சினீர் சின்னு நாயுடு, எஸ். கூடலிங்கம் பிள்ளை, டி. ஆர். சுந்தரம் பிள்ளை. சுரேந்திர நாத் ஆரியா, "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் முத்து நாடார் முதலியோர்களும் மற்றும் பல உள்ளூர் வெளியூர் பிரமுகர்களுமாக 300, 400 கனவான்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். விருந்தாளிகளை பாண்டு வாத்தியங்களுடன் வரவேற்று ஆசனத்திலமரச்செய்து ஆங்கில முறையில் சிற்றுண்டி வழங்கி கூட்டத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான் இராமசாமி முதலியாருக்கும், ஸ்ரீமான்கள் பி. டி. ராஜன், சௌந்தர பாண்டிய நாடார் அவர்களுக்கும் முனிசிபல் மாஜி வைஸ் சேர்மன் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு இவர்கள் மூவர்பேரிலும் பண்டிதர் சின்னுமணி பாகவதரவர்களால் கேட்போர்க்கு இனிமையானதும் ஆவேசமும், உற்சாகமும் தரக்கூடியதாக மூன்று பாக்களைப் பாடினார். பிறகு விருந்தாளிகள் தக்கபடி உபசாரப்பத்திரத்திற்கும் உபசரிப்புக்கும் பதில் சொன்னபின் மதுரை ஜனாப் அலாவுதீன்

குள் நடக்கும்" என்று போதிக்கின்றார். கீதையிலே நம் பகவான் "மிகுந்த உற்சாகத்துடனே எப்பொழுதும் வேலை செய். உனது சத்துருக்களை அழித்து உலக போகத்தை அனுபவி" என்று கூறுகின்றார். ஆனால் கிருஸ்துவின் வார்த்தைகளை ஐரோப்பியர் சட்டை செய்வதில்லை. அவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாய் மிகுந்த ராஜசகுணம் வாய்ந்தவர்களாய் உற்சாகத்துடனே உலகில் வெவ்வேறு பாகங்களிலுள்ள சுகங்களையும், ஆடம்பரங்களையும் ஒன்று குவித்து அவர்களுடைய இருதயம் திருப்தியடையும்படியாக அவற்றை அனுபவித்து வருகிறார்கள். "சத்துருக்களை அழிந்து உலகபோகத்தை அடையவேண்டிய" நாமோ உலக முடிவிற்கு தயாராக நமது மூட்டை முடிச்சுகளை யெல்லாம் "கட்டிவைத்துக் கொண்டு இரவும், பகலும் "தாமரை இலையில் தண்ணீரானது மெல்லியதாயும், சலனமுள்ளதாயும் இருக்கிறதுபோல மனுஷனுடைய ஜீவிதமும் அவ்வளவு உறுதியற்றதாயிருக்கிறது" என்று சோம்பேரி வேதாந்தம்" பாடிக்கொண்டு அவன் வீட்டில் தண்ணி குடிக்கலாமா? அவன் உண்பதை இவன் பார்க்கலாமா? இந்த வீதியில் அவன் நடக்கலாமா? விபூதி பெரிதா? நாமம் பெரிதா? துளசிமாலை போட்டாலே பாக்கியம் எல்லாம் வந்துவிடும். ருத்திராட்சகண்டிகை அணிந்துவிட்டாலே செய்யவேண்டியதெல்லாம் வந்துவிட்டது என்பவைகளிலே மனமெல்லாம் செலுத்தி ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறோம் பலன் யாதெனில் நாம் மரணபயத்தினால் வெளுத்துப்போய்விட்டோம் இதுதான் சந்தர்ப்பமென்று எமனும் தேசத்திலே பிளேக், மலேசுரம், க்ஷயம் முதலிய வியாதிகளையும் அனுப்பியிருக்கிறான் கீதையின் போதனைப்படி எவர் நடக்கின்றனர் ஐரோப்பியர்களே. கிருஸ்துவின் போதனைப்படி பின் பற்றியவர்கள் எவர்? இதை நாம் முதல் முதல் தெரிந்து கொள்ளவேண்டும். துக்கம் வந்தால் இருநூறுபழம், சந்தோஷம் வந்தால் நூறுபழம் அபிஷேகத்தோடு கடவுள் வேலையெல்லாம் முடிந்ததுஎன்றும் நம்மனம்போலவிருந்தால் நம் காரியமெல்லாம் கைகூடுமா? கடவுளுக்கு பூஜை நிவேதியம் செய்துவிட்டாலே நாமும் நம் குடும்பமும் ராஜ்யமும் க்ஷேமமடைந்துவிடுமென்று செய்த பூஜைபோனும் நம் பெரியவர்களிருந்த தேக அளவுமிடம் முதலியவைகள் சுருங்கிவிட்டன. குடும்பங்களில் கடனும், வியாதியும் கூத்தாடுகிறது. தேசத்தையோ தரித்திரமும் ஜாதிக்கொடுமையும் முற்றுகைபோடுகிறது ஆனதால் இதை யெல்லவரும் போக்கவேண்டும் நமக்குத் தெரியாதவைகளில் அனுபோகித்தவர்களுடைய வார்த்தையை கடடாயம கேட்கவேண்டும். கதரையே கட்ட முடியாதவர்களுக்கு எது முடியும் என்னும் சங்கைக்கு பதில் நீங்கள் சொல்லியே தீரவேண்டும். கடவுளைப்பற்றி உங்களுக்கு கவலை வேண்டாம். முதலில் கதரைக்கட்டுங்கள் கடவுள் உங்கள் பக்கமேயிருப்பார் இந்த முதற்படிகை கூடுமானால் முத்தியும் சுகம் கூடும். மாயை ஒழிந்தால் ஞானம் எப்படி முன்னிற்குமோ அதுபோல கதரால் உங்கள் உடையின் பிரமை நீக்கப்பட்டால் கடன் நீங்கி உலக சுகம் உங்களிடம் நிறையும்.

---

## வட ஆற்காடு ஜில்லா திராவிட சங்கம்.

சென்ற வெள்ளிக் கிழமை 17-ம் தேதி மாலை 5-மணிக்கு இவ்வூர் அமெரிக்கன் மிஷின் சர்ச்சுக்கு பக்கத்து பங்களாவில் பிராமணரல்லாதார் ஒரு கூட்டம் கூடி மேடி சங்கத்தை நூக்கத்தினின்று எழுப்பி தன்னுடைய பழைய வேலைகளை செய்யும் நிமித்தமாக புதிய நிர்வாக அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டதும். 'தவிர ஹிந்து மத பரிபாலன மசோதாவை' ஆதரித்தும் அதற்கு எதிரிடையாக செய்யும் போலிப் பிரசாரங்களைக் கண்டித்தும் ஒரு தீர்மானம் நிறைவேறப்பட்டது இத்தீர்மானத்தை மேன்மை தங்கிய ராஜா பிரதிநிதி அவர்களுக்கு தந்தி மூலியமாக வேலூர் துரைசாமி தெரிவிக்கிறார்.


பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

**தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!**

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,

220 தங்கசாலைத் தெரு, சென்னை



காதலர்காள்! கவனிக்க! கவனிக்க!

# ராஜ ராஜம்

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

காதல்ரகசியம்! அல்லது காதல்ரசம்!

## காதலின் வெற்றி.

இதில் இளம் காதலர்களின் அந்தரங்கக்காதலின் பெருமையும் சிறுமையும் ரகசியக் கடிதங்களினாலுண்டாகும், நன்மையும், தீமையும், காதலர்கள் ரகசியமாய் சந்தித்துச் சந்தித்து, பிரிந்து வருந்துவதும், மற்றும் காதலர்களின், பல அரிய மர்மங்களும், தற்கால பல அரிய ரகசியங்களும், படிக்கும் காதலரை மனம் கலங்கச் செய்யும் இவ்வரிய அழகிய சிறிய நூலின் விலை அணா 6 தான்.

8 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒன்று பெறலாம்.

## 1000 தலைவாங்கிய அதிசய சிந்தாமணி.

கையிலெடுத்தால், காதலர்கள், கீழே வைக்கமாட்டார்கள். எல்லாம் காதல்! காதல் ரசம்! அன்பு ரசம்! ஆனந்த வெள்ளம்! ஆசையின் பெருக்கு! ஆசை மயக்கம்! காதலின் உண்மை! இதில் அதிசய சிந்தாமணியின் ஆச்சரியங்களும், கிருஷ்ணவேணி, ரத்னவல்லி, பவளவல்லி, முத்துலக்ஷிமி, மாகதவல்லி ஆகிய இவ்வாறு சுந்தரிகளின் லீலா விநோதமும், இவ்வாறு பெண் ரத்னங்களும், ஒரு நாயகனை இச்சித்து, வீரபத்தினிகளாக விளங்குவதும், காதலர்களை உருகச் செய்யும் இவ்வற்புத நூலின் விலை ரூபாய் 1 தான்!

## 60 நாளில் இங்கிலீஷ் நன்றாய் கற்பீர்கள்.


சிலோன், பர்மா, மலேயா, பிஜி, தென்னாப்பிரிக்கா, முதலிய இடங்களிலுள்ள அநேக கூலிகளும், கங்காணிகளும், மணியக்காரர்கள், கர்ணங்கள், வியாபாரிகள், தொழிலாளிகள் மற்றும் பலரும், உபாத்தியாயரின்றி எழுதவும், படிக்கவும், பேசவும் இங்கிலீஷ் கற்றுக் கொண்டார்கள் என்றால் இதன் பெருமையை நீங்களே அறியப்படாதா! உடனே எழுதுங்கள்; தாமதியாதீர்கள்.

800 பக்கங்கொண்ட பெரிய புத்தகம் விலை ரூபாய் 2. தான்

[N B] மற்றும் எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்கும். ஆர்டர்கள் உடனுக்குடனும் தகுதியுள்ளவைகளுமே அனுப்பப்படும். மலாய் நாட்டிலுள்ளோர் முன்பணம் அனுப்பிப்பெறலாம்.

விலாசம்:— ஏ. என். ராஜா & கோ,
ராயபுரம், மதருஸ்.






## இனாம்! லிவர் பாக்கெட் வாட்ச். இனாம்!

14 கேரட் பவுண்டன் பேனா.

புதிதாய் கருவிக்கப்பட்ட எங்கள் இரடியம் நிப்புள்ள பேனாவை வாங்குபவர்களுக்கு இம்மாதம்வரைதான் **லிவர்வாட்ச் இனாம்.** வாட்ச் சரியான காலம் காட்டும். லிவர் சாமான்கள் நீடித்தகாலம் உழைக்கும பேனாவுக்கும் கெடியாரத்திற்கும் உத்திரவாதம் 5 வருஷம். ரொம்பவும் குறைந்த விலை ரூ. 3 15 0.

**லிவர் வாட்ச் இனாம் முந்துங்கள். கையிருப்பு கொஞ்சம்தான்.**

டெக்கன் வாட்ச் டிப்போ, (ஊ) 11வது பீட், சவுகார்பேட், மதராஸ்

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஞூ டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

**சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கேடு:**—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாசமும் வட்டி கொடுக்கப்படும்.

**பிக்செட் டிபாசிட்டு ஒரு வருஷ கேடு:**—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்ம்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், ரண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும்செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள்செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீடில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.



தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

## ராஜையர் ஆஸ்ரமம்.

சரஸ்வதி விலாசம் பிரஸ்ஸுக்கு எதிரில்

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆப்ரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

## ஆயிரக்கணக்கான வியாதி யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தன தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ் பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலவீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுமைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0.

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி



ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

சூஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



இனாம் இனாம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள். இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

## எமது "ஆநந்த குண போதினி."

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

## ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1- கு விலை ரூ. 2—0—0.
அந்திய நாட்டார் முன் ... அனுப்ப ... ண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், ... 302. தங்கசாலைத் தெரு, மதராஸ்.



## 200 தொழில் முறைகள்.



கூலிக்காரன்

தொழில் முறைகளைக் கற்று தனி முயற்சியால்

சீமானாயினன்

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள், சர்ப்பத்து, ஐஸ்கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம் பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப், செண்டு கூந்தல் தைலம், பற் பொடி, தேள் விஷசஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 200 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இனாம்.



ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினாப்பள்ளி.



## அம்பட்டன் பீயர்ஸ்



சோப் செய்து கோடீஸ்வரனாகிய உண்மை 24பக்கம் அணா 2. "என் சரித்திரம்" நான் ரூ. 4000 சம்பாதித்த வரலாறு. அணா 2. எத்தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

ஆர்ட் புக்ஸ் கம்பெனி, திருச்சினாப்பள்ளி.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ... ரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.